பக்கங்கள் 12 விலை சதம் 20

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதா வெளியீடு

அலுவலகம்: 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை

மலர் 1 | 3-6 62 | ஞாயிறு | இதழ் 51

'புதினம்' கருத்து:

## அநீதியை எதிர்க்க ஒரு நாள்!

வருகிறது, ஜூன் 5!

இந்த நாளைத் தமிழ்பேசும் மக்கள் துக்கதினமாக அனுட்டிக்க வேண்டுமென்று தமிழரசுக் கட்சி கேட்டிருக்கிறது.

ஆம், தமிழரசுக்கட்சி மட்டுமல்ல; தமிழ்மக்கள் — தமிழ்பேசும் மக்கள் அனைவருமே இத்தினத்தைத் துக்கதினமாகக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

ஏன்?

இலங்கைத் தமிழ்பேசும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது.

இதை எல்லாரும் ஒப்புக்கொள்கிறோம். தமிழரசார் மட்டுமல்ல; தமிழ்க் காங்கிரஸ், தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக காங்கிரஸ், ஈழத் தமிழ் முன்னணி, சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி — ஆகிய தமிழ் பேசுவோரை உறுப்பினராகக் கொண்ட எல்லாக் கட்சிகளுமே இதை ஒப்புக்கொள்கின்றன. எந்தக்கட்சியையும் சேராத சாதாரண தமிழ்மக்களும் இதை ஒப்புக்கொள்கிறார்கள். அரசாங்கத்தின் இனத்துவேஷ நடவடிக்கைகளைக் கண்டு வெறுப்புக் கொள்கிறார்கள். பலர் எதிர்க்கிறார்கள். சிலர் போர்முரசு கொட்டுகிறார்கள்!

தமிழ் பேசுவோருக்கு இந்நாட்டில் இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு உண்மையில் மனம் கொதிப்போர் எல்லோரும், தங்கள் மனக் கொதிப்பைக் காட்டும் ஒரே விஷயத்திலாவது ஒரு முகமாய் நிற்க வேண்டும்.

ஒரே நாளில் ஒரே முகமாக எல்லாரும் சேர்ந்து இந்த வெறுப்பைக் காட்டுவதுதான் உபயோகமாக இருக்கும்.

அதற்கு —

வருகிறது ஜூன் 5.

தமிழரசார் என்ன காரணத்துக்காக இந்த ஜூன் 5-ந் திகதியைத் தெரிந்தெடுத்திருந்தாலும் சரிதான்;—

தமிழ் பேசும் இனத்துக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்க்கும் முகமாக இந்த நாள் வருகிறது!

தமிழ் பேசும் மக்கள் அனைவருமே இதில் கலந்துகொள்ளலாம்— கலந்துகொள்ளவேண்டும்!.




எத்தித் திருடும்
அந்தக் காக்கை — அதற்கு
இரக்கப்பட வேணுமடி
பாப்பா!

# திரைமறைவில்

## இது இலங்கை வானொலி!

கடந்த ஒன்றரை வருட காலமாக இலங்கை வானொலியில் காலியாகிக் கிடந்த இரு பெரும் பதவிகளை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்படவிருக்கின்றன.

தேசிய ஒலிபரப்பு டைரக்டர், வர்த்தக ஒலிபரப்பு டைரக்டர் பதவிகள் காலியாக இருந்துவந்த போதிலும் அவற்றின் தற்காலிக டைரக்டர்களாக திரு. தேவிஸ் குருகேயும், திரு. விஜயமன்னவும் கடமையாற்றி வந்திருக்கிறார்கள்.

திரு. குருகே இப்பொழுது தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்.

ஒருபதவியில் தற்காலிக நியமனம் பெறுபவர்கள் காலகதியில் நிரந்தரமாக்கப் படுவதே இலங்கைவானொலியின் பாரம்பரிய வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் மேற்படி விஷயத்தில் அந்த வழக்கம் முற்றாகக் கைவிடப் பட்டு விட்டது என்பதற்கு போதிய காரணமிருக்கிறது. எந்தப் பதவியானாலும் விண்ணப்ப தாரர்களின் ஆகக்குறைந்த தராதரம் பட்டதாரியகவிருக்க வேண்டும் என்று அமைச்சர் வற்புறுத்தியிருக்கிறார். ஆகவே தற்காலிகமாகப் பதவி வகித்தவர்கள் நிரந்தரமாக்கப் படமாட்டார்கள் என்பது நிதர்சனம்.

இந்த நியமனங்களுக்கு ஏதாவது அரசியல் காரணங்கள் இருக்குமா?

இலங்கை வானொலியில் கணக்காளராகக் கடமையாற்றிவந்த தலியனகே ஒலிபரப்பு இலாக்காவுக்கு வெளியே மாற்றப் பட்டிருக்கிறார். இவர் சிலகாலம் வைத்திய விடுமுறையில் காரியாலயத்துக்கு வராமலிருந்தார்.

சில அதிகாரிகள் தன்னைப் பயமுறுத்தியதாகக் கறுவாக்காடு பொலிஸ் நிலையத்தில் புகார் செய்த றொனி டீமெல் இலங்கை வானொலியில் கடமையாற்றும் முதலாளித்துவக் கொள்கை உடையவர்களை ஒழித்துக் கட்டுவதற்குப் பாடு பட்டு வருகிறார் என்று திரு. பிலிப் குணவர்த்தனே சமீபத்தில் ஜனப்பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

றொனிடீமெல் முற்போக்கு வாதியாக எப்பொழுது மாறினார்?

மார்ச் தேர்தலில் யூ. என். பி. அபேட்சகராகத் தன்னை ஏற்றுக் கொள்ளும்படி இவர் கேட்டுக் கொண்டாராம். ஆனால் யூ. என். பி. அதை ஏற்றுக்கொள்ள வில்லையாம் ஆத்திரமடைந்த றொனி முற்போக்கு வாதியாக மாறியது மட்டுமல்லாமல் அரசாங்கத்தின் வலக்கரமாகியும் விட்டாராம். இனிமேலும் இலங்கை வானொலியில் முதலாளித்துவக் கொள்கை உடையவர்கள் கடமையாற்றுவார்களா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## போராட்டம் எப்போது?

சமீபத்தில் மன்னாரில் கூடிய தமிழரசாரின் செயற்குழுக்கூட்டத்தில் அடுத்த போராட்டப் பிரச்சனை முக்கியமாக விவாதிக்கப்பட்டதாம். இளம் துடிப்புள்ள சிலர், எவ்வளவு விரைவாகத் தொடங்கமுடியுமோ அவ்வளவு விரைவில் போராட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று அவதிப் பட்டார்களாம். போராட்டம் நடத்துவது உறுதிதானென்றும், ஆனால் மெத்த அவதிப்படாமல் ஆவணியில் நடைபெறும் மாநாட்டுக்குப் பின்னரே போராட்டத்தைத் தொடங்க வேண்டுமென்றும், அதற்குள் பொதுமக்களைப் போராட்டத்துக்குத் தயார் செய்து வைக்கவேண்டுமென்றும் தலைமைப்பீடம் தீர்மானித்திருக்கிறதாம். இந்தத் தயாராக்குதலின் முதற்படியாகவே ஜூன் 5-ந் திகதித் துக்கதினமும் ஏற்பாடாகியுள்ளதாம்!

## தப்பும் வழி!

'கட்டிடம் தேவை; காலியாக்கு!' என்று யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல வர்த்தகரின் கட்டிடத்தை மக்கள் வங்கிக்காகக் கேட்கப்படுகிறதென்று சென்றவாரம் குறிப்பிட்டேனல்லவா? இதேமாதிரி வெலிமடையிலும் ஒருசம்பவம் நடைபெற்றதாம். முஸ்லிம்வர்த்தகர் ஒருவருடையகட்டிடத்தை மக்கள் வங்கிக்காகத் தாரை வார்க்கும்படி கேட்டார்களாம். ஆனால் குறிப்பிட்ட வெலிமடை வர்த்தகர் கெட்டிக்காரர். உடனடியாகத் தாம் அதுவரை இருந்துவந்த அரசியல் கட்சியை விட்டுவிட்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினராகவும் சேர்ந்து கொண்டாராம். அதுமட்டுமல்ல, ஒரு பெரிய தொகையை கட்சிநிதியாகவும் அளித்தாராம்! அவருடைய கட்டிடத்தை மக்கள்வங்கிக்கு எடுக்கும் விஷயம் இப்போது பிசுபிசுத்து விட்டதாகத் தெரிகிறது.

— அம்பலத்துறைவோன்

## தேவை

'புதினம்' அலுவலகத்தில் கடமையாற்றுவதற்கு கீழ்க்காணும் இருபதவிகளுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

1. உதவி ஆசிரியர்
2. விளம்பரப்பகுதி நிர்வாகி

விண்ணப்பக்காரர்கள், தங்கள் தகுதியைக் குறிப்பிட்டுச் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். தகுதிக்கேற்ப சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

நிர்வாகி, 'புதினம்'
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

'மில்க்வைற் நீல சோப்'
ஒன்றே
உங்கள் சலவை வேலையைபூர்த்தி செய்கிறது.




## சிரித்துப் பாருங்கள்:

### பிரயோசனமற்ற செலவு

ஒருவன்:- உன்னுடைய சம்பளத்தை எப்படிச் செலவு செய்கிறாய்?

மற்றவன்:- ஒரு பங்கைக் குடிப்பதிலும் இன்னொருபங்கை வேறுவிதக் கேளிக்கைகளிலும் செலவு செய்கிறேன். மிகுதிப்பணத்தை மடைத்தனமாய் பிரயோசனமற்ற வழியில் செலவு செய்து விடுகிறேன்.

—எஸ். சின்னராசா,
திருகோணமலை.

### சாதுர்யவதி

ஒருயுவதி:- எனது காதலர் நூற்றில் ஒருவர். மிக மிக நல்லவர்.

மற்றவள்: மற்றத் தொண்ணூற்றொன்பது பேரைப்பற்றியும் அவன் அறிந்து கொள்ளாமல் நீளப்படிசாதுரியமாய் நடந்து கொள்கிறாய்.

—செ. பொன்னம்பலம்
மட்டக்களப்பு.

### ஒருகும்பத்தில் அடக்கம்

ஒருவன்:- (ஒரு கோவில் அர்ச்சகரிடம் போய்) சுவாமிகளே, ஒன்பது கும்பம் வைக்க வேண்டும். அதற்கு என்ன செலவாகும்?

அர்ச்சகர்:- ஒன்பது ரூபாய். (மறுநாள் அர்ச்சகர் ஒரு கும்பம் மட்டும் வைப்பதைக் கண்ட அந்தமனிதன் கேட்டான்.)

ஒருவன்:- என்ன சுவாமிகளே! ஒருகும்பம்மட்டுந்தானே வைத்திருக்கிறீர்கள்?

அர்ச்சகர்: உனக்குத் தெரியாதப்பா, இந்த ஒரு கும்பத்தில் ஒன்பது கும்பமும் அடக்கமாகி விட்டது
(அவன் ஒரு ரூபாவை மட்டும் அர்ச்சகரிடம் கொடுத்தான்)

அர்ச்சகர்:- என்னப்பா ஒன்பது ரூபாவுக்கு ஒரு ரூபா வைத்திருக்கிறாயே?

ஒருவன்:- உங்களுக்குத் தெரியாது சுவாமிகளே, ஒன்பது ரூபாவும் இந்த ஒரு ரூபாவில் அடக்கம்.

—எஸ். கணேசன், கைதடி.

## என்னசேதி?

### யாழ்ப்பாணத்தின் தமிழரசு மேயர்

யாழ்ப்பாண மேயராக டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் இவ்வாரம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பழைய மேயர் திரு. யேக்கப் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு நடந்த தேர்தல் இது. யாழ்ப்பாணத்தில் முதலாவது தமிழரசு மேயர் டாக்டர் தர்மலிங்கம் அவர்களே.

### தர்மகுலசிங்கம் நினைவு தினம்

தொழிலாளர் தலைவரான திரு. தர்மகுலசிங்கத்தின் நினைவுதினம் ஜூலை மாதம் 28ம் திகதி அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

மந்திகையில் நடைபெறவிருக்கும் வைபவத்தில் சமசமாஜக் கட்சிப்பிரமுகர்களான டாக்டர் என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, ஆகியோர் கலந்து கொள்வார்கள்,

### மற்றொரு வண்டிச் சவாரி

யாழ்ப்பாணத்தில்மற்றொரு மாட்டுவண்டிப் போட்டியை நடத்துவதற்தான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

காங்கேசன்துறை உதவிப் பொலீஸ் அதிகாரியான திரு. எஸ். மரியநாயகம், அண்மையில் இதுகுறித்து ஒரு கூட்டம் நடாத்தி இம்மாதம் 10ம் திகதி போட்டியை யாழ் -பொலீஸ் மைதானத்தில் நடத்துவதென முடிவு செய்துள்ளார்.

### திருமலையில் கைப்பணிக் காட்சி

திரு கோணமலை, ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில், அதே கல்லூரிஆசிரியைசெல்வி ஆர். விஸ்வலிங்கத்தின் கைப்பணிப் பொருட் காட்சி நடைபெற்றது.

இத்தகைய கண்காட்சிகளினால் கலைவளரும் என்று கண்காட்சியைத் திறந்து வைத்துப் பேசிய கல்வி அதிகாரி திரு. ஏ. ஞானசேகரம் கூறினார்.

### வாணி கலைக்கழக கூட்டம்

20-5-62 ஞாயிற்றுக் கிழமை கரவெட்டி சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் வாணி கலைக்கழக மாணவர்கள் கூட்டம் நடைபெற்றது.

நடன, இசை, சமய வகுப்புக்கள் நடாத்துவது பற்றி மேற்படி கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

தோட்டத் தொழிற்சங்கப் போட்டியில்

# கருவாட்டைக் காட்டி ஆள் பிடிக்கும் தோட்டத் தொழிலாளர் யூனியன்

## லொறிக் கணக்கில் கருவாடு வந்தவிதம் எப்படி?

இலங்கை மக்களின் கல்யாண, சடங்கு, விருந்து வைபவங்களில் பிரதானத்துவம் வகித்து வருவதும் பெரும்பான்மையானவர்களின் சாதாரண உணவாகவும் இருந்து வரும் 'இறக்குமதிச் சரக்கான' கருவாடு 'வினியோகத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருப்பதால், 'கட்டுப்பாட்டு விலையில் 'மட்டுமின்றி–'கூடவிலை'க்குக் கூடக் கிடைப்பது அரிதாகி விட்டது.

தீவின் பல பகுதிகளிலும் கூட்டுறவு மொத்த விற்பனவு இலாக்காவைச் சேர்ந்த கடைகளின் முன், கடும் வெயில், அடை மழை ஆகியவற்றைப் பொருட்படுத்தாது, 'கருவாடு வாங்கி விடுவது' என்ற ஒரே லட்சியத்துடன், மக்கள் அணிவகுத்து நிற்பது வழக்கமாகி விட்டது.

இந்தக்கருவாடுஎப்படி 'அரசினருக்கு ஒரு 'பிரச்சனை'யாகி எதிர்க்கட்சிகளுக்கும், அரசாங்கத்தை கண்டனம் பண்ணுவதற்கோ அல்லது அவர்களின் கொள்கையை எள்ளி நகையாடுவதற்கோ ஒரு வாய்ப்பை அளித்திருக்கிறதோ, அதே போலகாளாந்தமும்உண்டாகி வரும் தொழில் சங்கங்களுக்கே 'சிறந்த பிரச்சாரப் பொருளாகவும் பயன் படத் தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## பழுதடைந்த பொருளாம்! தோட்டத் தொழிலாருக்கு அதுதான் தகுதியானதா?

''கருவாட்டுப் பட்சணிகள் அதிகமாக உள்ள தோட்டப் பகுதிகளில்த் தான் பல சந்தர்ப்ப வாதத் தொழிற் சங்கங்கள் இது வரை, இந்திய வம்சாவழியின் பிரஜா உரிமை' போன்ற பிரச்சினைகளை, 'பிரச்சாரப் பொருளாக'க் கொண்டு தங்கள் கைவரிசைகளைக் காட்டிவந்தன. அந்தப் பிரச்சினையும் 'நாட்கள் தேய்வதற்கேற்ப' பழைய பிரச்சனையானதுடன் மக்களும் அலுத்துப்போய் இருந்த சமயத்தில் தான், 'கருவாட்டுப் பிரச்னை உண்டானது. விடுவார்களா, சந்தர்ப்ப வாதிகள்? ''தங்கள் சங்கத்தில் சேர்ந்தால், பெரும்பாலும் தோட்டத்தொழிலாளர்களை எதிர் நோக்கியுள்ள கருவாட்டுப் பிரச்னைக்கு ஒழுங்கான முடிவு ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். ஏமாந்தே பழக்கப்பட்டுப் போன தொழிலாளர்களும் 'தீர்க்க மாட்டீர்களா?'' என ஏங்கினர்.

சில பாரளுமன்ற உறுப்பினர்கள் உதவியுடன் வர்த்தகக் கமிஷனர்களுடன் ஆசோசனைகளை நடத்தினர். சில பிரமுகர்கள், அதன் விளைவாக, ஒரு குறிப்பிட்ட தினத்தில், கருவாட்டுடன் ஒரு பிரதிநிதியையும் சுமந்து கொண்டு ஒரு லொறி குறிப்பிட்ட ஒரு தோட்டத்திற்குச் சென்றது. விநியோகம் ஆரம்பமானவுடன், குறிப்பிட்ட சங்கப் பிரதிநிதி, 'எங்கள் சங்கத்தினருக்கு மாத்திரம் தான் கருவாடு 'விநியோகிக்கப்படும்'' என்றாராம் மாற்றுச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும்—சங்கத்தைச் சேராதவர்களுமான மற்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டியிருந்ததாம்!

இந்தச் சம்பவம் நடந்த. சில நாட்களில் மாற்றுச் சங்கக் கூட்டம் நடந்து—அதில் பேசிய பிரமுகர், 'கருவாட்டைக்காட்டி, சங்கத்தைக் கலைக்க இயலாது' என்று அடித்துச்சொன்னார்.

இன்றைய நிலையில், மேற்படி சம்பவம் குறிப்பிட்ட இரு சங்கங்களுக்கிடையில் மோதல் ஒன்றுக்கு வழிகோலியிருக்கையில், நியாய விலைக்கடைகளிலேயே கருவாடு கிடைப்பது அரிதாயிருக்கும். இந்தச்சமயத்தில் வண்டிக் கணக்கில் வினியோகம் செய்ய, குறிப்பிட்ட சங்கத்தினருக்கு எங்கிருந்து கருவாடு கிடைத்தது!'' என்று கேட்கப்பட்டுவருகிறது.

இத்தக் கேள்விக்கும் பதில் ஒன்று கிடைத்துள்ளது. அதாவது: ''அழுகிப்போய், வினியோகிக்கப்படாது, என்று தடை விதிக்கப்பட்டு, கிட்டங்கிகளில் தேங்கிக் கிடந்த மூடைகளுள் பொறுக்கியெடுக்கப்பட்ட மூடைகளே வினியோகிக்கப்பட்டன'' என்பதுதான் அந்தப் பதில். இது எந்த அளவில் உண்மை என்பது, ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்! என்றாலும், உண்மையிலேயே இப்படி நடந்திருக்குமானால், அது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும். ஆனால், கருவாடு வினியோகிக்கப்பட்டதும், பிரதிநிதி ''எங்கள் சங்கத்தினருக்கு மாத்திரம் தான்......'' என்று சொன்னதும் மறுக்கப்படமுடியாத உண்மை.

குறிப்பிட்ட தொழிற் சங்கத்தினரின், 'கருவாட்டைக் காட்டி ஆள் பிடிக்கும் 'நடவடிக்கை 'தொழிலாளிக்காக சங்கமா தொழிற் சங்கத்துக்காகத் தொழிலாளியா அல்லது 'கருவாடு பெறுவதற்கு' தொழிலாழி தொழிற் சங்கத்தில் சேரவேண்டுமா? என்று கேட்கத் தூண்டுகிறது.

தொழிற் சங்க இயக்கம் இலங்கைக்குப் புதிதல்ல—20 வருடத்தையது. ஆனால், பழமை வாய்ந்த தொழிற் சங்கங்களில், நாளடைவில் சில சுயநலமிகள் புகுந்தமையினாலும்; கடைசிகாலத்தில் எத்தனையோ தொழிற்சங்கங்கள் காளான்களாக முளைத்து அழுகிப்போனமையாலும், தொழிலாளர்களுக்குச்சேவை செய்யும் நோக்கத்தை விடுத்து—தங்களையும் தங்கள் அந்தஸ்தையும் பாதுகாத்துக் கொள்வதற்கே தொழிற் சங்கங்களை பாவித்துக்கொண்டு வந்தாலும்—வருவதாலும் இயன்றளவு இலங்கையைப் பொறுத்த மட்டில், தொழிலாளர்கள்— குறிப்பாக மலைநாட்டுத் தொழிலாளர்கள் —சீரற்ற நிலைமையிலேயே இருந்து வருகிறார்கள்.

இந்த நிலைமையிலுள்ளவர்களை—திருத்துவதுதான் அவசியமேயொழிய, அவர்களை 'கருவாட்டிற்கு' விலைபேசித் திரிவது கயமையாகும்.

எனவே, குறிப்பிட்ட தொழிற் சங்கத்தின் புனிதத் தன்மையை பாதுகாப்பது மிகவும் அவசியமாகும் என்பதுடன் ஒவ்வொரு தொழிற் சங்கத்தினதும் கடமையாகும்.

# நான் நாயென்றால் நீ 'கடை கெட்டவன்!'

— டாக்டர் நாகநாதன்

**டாக்டர் நாகநர்தனைப் பார்த்து 'நாயே!' என்று ஏசினார் பிலிப் குணவர்த்தனை. நாகநாதனுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது; கதிரையை விட்டுத் துள்ளி எழுந்தார் அவர். இன்னொருவர் அவரை அமர்த்தினார். ''நான் நாயென்றால் நீ ஒரு கடைகெட்ட போக்கிரி!'' என்று நாகநாதன் உறுமினார்! இந்தச் சம்பவம் சென்ற வாரம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.**

டாக்டர் ஈ. எம். நாகநாதனுக்கும், திரு. பிலிப் குணவர்த்தனைக்குமிடையேகாரசாரமானவார்த்தைப் பிரயோகம் நடைபெற்றது:

''உன்னை உதைத்து நொறுக்கிவிடுவேன்'' என்று ஒரு சந்தர்ப்பத்தில் குணவர்த்தனை மீது பாய்ந்தார் நாகநாதன்.

பார்லிமென்டில்திரு.டட்லி சேனநாயக்கா பேசிக்கொண்டிருக்கையில் டாக்டர் நாகநாதன் இடைமறித்து திரு.பிலிப் குணவர்த்தனையைப் பாதிக்கக்கூடியவிதமாக ஏதோ கூறினார்.

உடனே பிலிப் குணவர்த்தனை துள்ளி எழுந்து உபசபாநாயகரைப் பார்த்து ''இந்த நாயை உட்காரச் சொல்லுங்கள்'' என்று கத்தினார்.

டாக்டர் நாகநாதன்:- நாயென்று கூற உனக்கு எவ்வளவு துணிச்சல். நீ கூறியதை உடனே வாபஸ் பெறவேண்டும்.

டாக்டர் நாகநாதன் தனது ஆசனத்துக்கு மேலால் பாய்ந்து சென்று பிலிப்குணவர்த்தனையை நெருங்கினார். திரு. சேனநாயக்கா குறுக்கே ஓடிவந்து நாகநாதனைப் பிடித்துக் கொண்டார்.

உப சபாநாயகர்: அமைதி, அமைதி, (குணவர்த்தனையைப் பார்த்து) நீர் கூறியதை வாபஸ் பெறவேண்டும்.

நாகநாதன்:- நான் நாயென்றால் நீ ஒரு 'கடை கெட்டவன்'
குணவர்த்தனை:- ஏன் அவரை வாபஸ் பெறச் சொல்லக் கூடாது?

உபசபாநாயகர்: நீங்கள் இருவருமே வாபஸ் பெறவேண்டும்.

நாகநாதன்: அவர் ஒருகடைகெட்ட எத்தன். அவரை இப்பொழுது உதைத்து நொறுக்க நான் தயாராயிருக்கிறேன்.

திரு பிலிப் குணவர்த்தனை 'நாய்' என்று கூறியதை வாபஸ் பெற்றதும் டாக்டர் நாகநாதனும் 'கடைகெட்டவன்' என்ற வார்த்தையை வாபஸ் பெற்றார்.

# 'பூதந்தேவனார்' அரங்கு

## முன்னும் பின்னும்

தற்காலத்திய ஈழத்து இலக்கிய வட்டாரத்தில் முற்போக்குப்பிற்போக்கு வாதத்தை அடுத்து மேலெழுந்து நிற்கும் பிரச்சினை 1955-க்குப் பின்தான் ஈழத்தில் சிறுகதை வளர்ந்தது என்று விடாப்பிடியாக ஒருசிலர் கூக்குரலிடுவதாகும்; பரந்த அளவில் பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் தோன்றியுள்ளதை யாரும் மறுக்க முடியாது, ஆனால் நாங்கள் தான் அதைச் சாதித்தோம், அதற்கு முன் வெறும் பாழ் வெளியாகத்தான் இருந்தது என்பதை யாரும் ஒப்புக்கொள்ளத் தயாராகவில்லை. இதற்கு உதாரணங் காட்டுவது போலக் கலைச்செல்விப் பத்திரிகையில், 1940-ம் ஆண்டளவில் வெளியான ஆனந்தனின் தண்ணீர், இலங்கையர்கோனின் வஞ்சம், வெள்ளிப்பாதசரம் சி. வைத்திலிங்கத்தின் பாற்கஞ்சி என்பன பிரசுரமாயின. சமீபத்தில் அதிகம் ஆர்ப்பாட்டமில்லாமல் தரமான இலக்கிய சஞ்சிகையாக வெளிவந்திருக்கும் தேனருவிப் பத்திரிகையில் அ. ந. கந்தசாமியின் இரத்த உறவை அடுத்து சி. வைத்திலிங்கத்தின் நெடு வழி இம்மாதம் மறுபிரசுரமாகியிருக்கிறது. தண்ணீர், வஞ்சம், வெள்ளிப் பாதசரம், பாற்கஞ்சி, நெடுவழி என்பன இருபது வருடங்களுக்கு முன் வெளிவந்த ஈழத்துச்சிறுகதைகள். ஏதோ யதார்த்தம், மண்வாசனை, தேசீய இலக்கியம் என்று கூக்குரலிடும் விமர்சகர்கள் தயவுசெய்து அவற்றைக் கடைக்கணித் தருளட்டும். அவற்றின் கதைக் கட்டுக்கோப்பு, வர்ணனை, பின்னணியை எடுத்துச்சொல்லும் உத்திமுறை, வாசித்தபின் ஏற்படும் மன நிறைவு, மனதில் தங்கும் தன்மை இவற்றேடுஇக்காலப் படைப்பில் உயர்ந்த சிறுகதைகளாகிய ஐந்தைஒத்துப்பார்க்கட்டும், அப்போதுதான் சிறுகதைப்படைப்பில் நமக்குள் ஏற்பட்டிருக்கும் இடைவெளி தெரியும். ஆழமில்லாத் தன்மையும்வெற்றெலும்புக்கூடாக அவை வெளிவந்திருப்பதும் புரியும், இவற்றைப்போல புத்தனின் சுவடு (சு. வே.) வண்டிச்சவாரி. (அ. செ. மு.) இரண்டு ஊர்வலங்கள் (சம்பந்தன்) குட்டைநாய் (சொக்கன்) இவையும் வெளிவந்தால் தோணி (வ. அ. இராசரத்தினம்) ஒருபிடி சோறு (கனக. செந்திநாதன்) பிள்ளையார் கொடுத்தார் (வரதர்) இவற்றேடு கட்டி வைத்திருக்கலாம். உண்மையில் ஈழத்தின் சிறுகதை வளர்கிறதா தேய்கிறதா என்பதை அவற்றிலிருந்து ஆராயலாம்.

## நெடுவழி

இம்மாதத் தேனருவியில் வெளிவந்திருக்கும் நெடுவழியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேனல்லவா? ஈழத்துச் சிறுகதை ஆசிரியருக்கெல்லாம் முன்னேடி என்று குறிப்பிடப்படும் சி. வைத்திலிங்கத்தின் அரிய படைப்பு இது. புதுமைப்பித்தன் போன்ருேர் பிரச்சினைக் கதைகளைச் சிருஷ்டித்தனர்என்றும், ஈழத்தில் அக்காலக்கட்டடத்தில் அப்படிப்பட்ட முயற்சி செய்யப்படவில்லை என்றும், பலர்குறைப்படுகின்றனர், அக்குறை இக்கதையால் நீங்குகிறது. ஆம், இது ஒரு பிரச்சினைக் கதை, அது ஒரு தீராத பிரச்சினை, இளவயதுடைய கன்னி ஒருத்தி கணவனைப் பிரிந்து மூன்று வருடமாய்த் தனிமையில் இருக்கிருள், வயது, தனிமை, சூழல் என்பன அவளை ஒழுக்கங்கெட்டவளாகச் செய்து விடுகிறது, அதனுல் அவள் கையில் ஒரு குழந்தை. அவள்கணவன் திரும்பி வருகிருன், அப்புறம்......அங்கேதான் பிரச்சினை உதயமாகிறது; சில கதாசிரியர்கள் அவளைக் கொன்று விடுகிருர்கள், சிலர் சேர்த்துவைக்க முயன்று தோல்வி கண்டிருக்கிருர்கள், தன்குற்றத்துக்குக் கழுவாயாகப் புனித தலத்தை மேற்கொள்ள வேண்டுமென்று சொல்லி அகலிகையை உதாரணங்காட்டுகிருர்கள், வைத்திலிங்கம் இந்தப் பிரச்சினைக் கதையை வாளின்மேல் நடத்தி கதைத் தலைவி மெனிக்காமேல் அனுதாபம் பெறச் செய்திருக்கிருர், ஒரு சொல் தவறினுலும் பாத்திரப் பண்பு குறைந்துவிடும், இச் சிறுகதையில் அவர் எழுதியிருக்கும் வர்ணனை, சம்பாஷனை எல்லாம் அளவுகோலால் அளந்துஎழுதப்பட்டிருக்கின்றன. "முத்து மெனிக்கா திடீரென்று பாய்ந்து அவனை இறுக அணைத்துக் கதறினுள், பின்னர் கீழே விழுந்து அவன் பாதங்களைத் தொட்டுத் தன்கண்களில் ஒற்றிக்கொண்டாள். அப்பொழுது அவன் உருக்கம்நிறைந்த குரலில் "மெனிக்கா, என் மன்னிப்பு உனக்கு வேண்டாம். உலகம் உன்னை மன்னிக்கவேண்டும். முதல் அதைப் பெற்றுக்கொண்டுவா" என்ருன்!... 'முத்து மெனிக்கா தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு யுகம் யுகாந்திரமாய்ப் போய்க்கொண்டிருக்கும் அபாக்கியவதிகளான தாய்மாரின் அடிகளைப் பின்பற்றிச் சென்றுகொண்டிருந்தாள். முன்னே குரூர உலகம். வழியோ நெடுவழி" இப்படிமுடிகிறது கதை. இக்கதையைப்பற்றிப் பெரிய விமர்சனம் எழுதவேண்டும் என்று எனக்கு நெடுநாளாக ஆசை. ஆனுல் சந்தர்ப்பம்தான் வாய்க்கவில்லை. இப்போதோகதை மறுபிரசுரம் ஆகிவிட்டது. ஆங்கிலம் படித்த ஆனுனப்பட்ட விமர்சகர்கள் தங்கள் பார்வையை இக்கதைப்பக்கம் திருப்பலாம் என்ற அளவோடு விட்டுவிடுகிறேன்

## புளியங்குடிப் புராணம்.

சிறுகதையின் தரம் எப்படியிருந்தாலும் நகைச்சுவைக் கட்டுரைகளின் தரம் தமிழ் நாட்டிலும் இங்கும் மிகமிகத் தாழ்ந்துவிட்டது. தகுந்த ஆசிரியர்கள் இத்துறையில் இப்போது இல்லை, பழையபத்திரிகைப் பரவையில் ஒரு கைவிட்டு எடுத்தாலும் அதில் உள்ள நகைச்சுவை போதும் போதுமென்றிருக்கிறது. மிகப்பழைய குமரன் ஆண்டுமடல் ஒன்றைப் பொழுதுபோக்காக வாசித்துக் கொண்டிருந்தேன் "குட்டிச் சாத்தான் A. B. C. D. E. F. etc" என்பவர் எழுதிய புளியங்குடித்தல புராணம் என்ற கட்டுரை வரிக்கு வரி நகைச்சுவைக் களஞ்சியமாக மிளிர்ந்தது. அதில் சில துணுக்குகளை உங்களோடு பகிர்ந்து சுவைக்க ஆசைப் படுகிறேன்'

"ராம சேஷண்ணுவால் பாடப்பட்டதுதான் புளியங்குடித்தல புராணம், அவரைப் பற்றிச் சில வார்த்தை. ராம சேஷண்ணு மிகச் சாது. பரம ஏழை' நாவற்பழக்க றுப்பு, உடம்பில் ஆங்காங்கு மேகப்பற்றுகள்...... கம்பன் பாட்டிலுள்ள காவியச் சுவையும் பெரிய புராணத்தின் தெய்வக் கவிஅழகும் பாரதி பாட்டின் ஜீவ உணர்ச்சியும் புளியங்குடிக்கு வந்து சேரவில்லை. தமிழறிவுள்ளவர்கள் அங்கு ஒருவரும் இல்லாத படியால் சேஷண்ணு பெரும் புலவராக விளங்கினுர்......... புளியமரம் அதிகமாய் இருந்த படியால் புளியங்குடி என்று பெயர் வந்தது என்பது அவருக்குப் பொருத்தமாகத் தோன்ற வில்லை. ஆகவே அவர் புளியங்குடி என்பதை (புள் + இயங்கு + குடி) பறவைகள் இயங்குகின்ற குடி என வியாக்கியானஞ் செய்து கதைகட்டினுர், கங்கா தீர்த்தத்தை விஞயகப்பெருமான் காக்கை உருக்கொண்டு கவிழ்த்துவிட்டுத் திரும்பிப் பாண்டிய நாட்டுக்கு வரும்பொழுது எச்சமிட்ட இடமே புள் இயங்கு குடியாகும்...... இப்புராணத்தில் உள்ள படலத்தின் பெயர் திருநடனங்கள் கண்ட படலம் என்பது, அதன் வரலாறு இதுதான். அவ்வூரில் உள்ள தாசி பொன்னம்மாளைப் பக்கத்து ஊரிலுள்ள சுப்பிரமணியமுதலியார் சொந்தப் படுத்தி வைத்திருந்தார், அதனுல் அவரை ஜனங்கள் மிகக் கேவலமாகப் பேசத் தலைப்பட்டனர். அவர் நமது சேஷண்ணுவுக்குமிகவும் வேண்டியவர். ஆகவே அவருடைய அவமானத்தைப் போக்கக் கருதி இப்படலத்தைப் பாடினுர். அதில் பொன்னனையாளுடைய வம்சத்தில் பிறந்த புளியங்குடித் தாசிகளின் நடத்தையை விநாயக பூஜா துரந்தரரேசுரர் கண்டு ஆனந்தித்த விதமும் உயர்ந்த க்ஷேத்திரமாதலால் இங்கு செய்யப்படும் இவ்வித காரியங்களும் வைதிக காரியங்களாகவே கருதப்பட வேண்டுமென்பதும், அப்படி இருந்தவர்கள் முத்தி பெற்ற விபரமும், அவர்களைக் குறை கூறியவர்கள் கொடு நரகடைந்த விபரங்களும் கூறப்பட்டிருந்தன.' இப்படிக் கட்டுரை முழுவதுமே செல்கிறது. இப்படி எழுத தட்டல் தடவல் படிப்புப் போதாது. இது எழுதுவது கடினமோ?...... என்று சிரிப்பவர்கள் எழுதிப் பாருங்கள். மண்டையை உடைத்தது தான் மிச்சம்.

## கொசுகாட்டிச் சித்தர் பாட்டு.

யமலோகக் 'கன்பரன்சு'க்கு கொசுகாட்டிச் சித்தர் தமது பரிவாரங்களுடன் மாத்திரைக் கோல் தாங்கிய கையினராக வந்து சேர்ந்தார், எல்லோரும் வந்தனம் கூறி வணங்கினர். சித்தர் பின்வருமாறு பாட ஆரம்பித்தார்:-

"ஆடு கொசுகே!
நெளிந்தாடு கொசுகே—அந்த
அயன் பதங்
கண்டோமென் றுடுகொசுகே
பழய மனிதரெலாம்
போயொழிந்தனர்
பழைய பிணிகளுக்கும்
வேலையில்லையே
புதிய பிணிகளெல்லாம்
பொடிக் கொசுகினுல்
பொலிந்து விளங்கின வென்
றுடு கொசுகே
நூற்றுக்குத் தொண்ணூறு
படிப்பில்லையாம்
நொண்டிச் சவங்களென்
றுடு கொசுகே
பிணியும் கொடும்பசியும்
பேதை வாழ்க்கையும்
பெயர்ந்து விலகாதென்
றுடு கொசுகே
குடிக்கிற தண்ணீரிற்
காலலம்புவார்
குளமென்றும் கிணறென்றும்
பேதமறியார்"

இப்படிச் செல்கிறது கொசுகாட்டிச் சித்தர் பாட்டு. சுகாதாரத்தையும் ஹாஸ்யத்தோடு சொல்லும் கவிதைப் பாட்டும் அதே ஆண்டு மடலில் இருப்பதுதான். ஆனுல் இப்போதைய ஹாஸ்யம்...?

நாடகம்

## "பாசத்தின் எதிரொலி"

அண்ணன் தங்கைபாசம்! இதைத்தான் கதை சுற்றிச் சுற்றி ஓடுகிறது. பழம் கள்ளானுலும் புதுப் பானையில் ஊற்றப்பட்டிருக்கிறது. போதைகுறையவில்லை.

அநேகமாக எல்லா நடிகர்களும் நன்ருவே நடித்திருக்கிருர்கள், சேகராக நடித்த திரு. தவலிங்கத்துக்கு கலையரசு, சொர்ணலிங்கமே தங்கப் பதக்கம் கொடுத்துப் பாராட்டியிருக்கிருர். பாலனக நடித்த திரு. 'தம்பி' இன்ஸ்பெக்டராக நடித்த திரு. முத்துக்குமாரு, கதாநாயகன்மகேந்திரன் எல்லாரும் நன்ருக நடித்தனர்.

ஹாஸ்யப் பகுதி நாடகத்துக்கு மெருகூட்டுகிறது.

ஆனுல் பெண்களின் நடிப்பு மட்டும் எடுபடவேயில்லை,

நாடகம் முழுவதிலும் ரசிகர்களாலும் தலைமை வகித்த கலையரசு அவர்களாலும் போற்றப்பட்டது ஒன்று—

அதுதான் காட்சி மாறும் பொழுது இருந்த வேகம்! பெரும் பெரும் நாடகமன்றத்தினர்கள் எல்லாம் இந்த விஷயத்தில் 'ததிங்கிண தோம்' போடும் வேளையில் தற்பொழுதுதான் தொடங்கிய 'உதயசூரியன்' நாடக மன்றத்தினர் இதை மிகவும் சிறப்பாக அமைத்ததற்காக அவர்களை எவ்வளவு பாராட்டினுலும் தகும்! இவ்வளவுநிறைகள் இருந்தும் நடிகர்களுக்குப் போதியளவு ஒத்திகைகொடுக்காத குறை ஆங்காங்கே தெரியத்தான் செய்தது.

இக்குறை நீக்கப்படவேண்டும்.

—அம்பிகை

# 'எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நடிப்பவனே கலைஞன்!'

## — எம். என். ராஜம்

"குறிப்பிட்ட ஒரு பாத்திரம் தான் என்றால் நடிக்க முடியும் என்று கூறும் நடிகர்களை உண்மையான கலைஞர்கள் என்று கூறமுடியாது. எத்தகைய பாத்திரமானாலும் ஏற்றுத்திறம்பட நடிப்பவனே உண்மைக் கலைஞன்" என்று தென்னகத் திரைவானில் இணையிலா வில்லியாக இன்று ஒளி விட்டுப் பிரகாசிக்கும் எம், என். ராஜம் ஒரு நிருபரிடம் சமீபத்தில் கூறினார்.

''நடிப்புக்கும் நிஜவாழ்க்கைக்கும் எவ்வித தொடர்புமில்லை. வில்லியாகவோ, வில்லனாகவோ படத்தில் தோன்றுபவர்கள் வீட்டிலும் அப்படியே இருப்பார்கள் என்று சிலர் நினைக்கக்கூடும். அது தவறு" என்று மேலும் ராஜம் கூறுகிறார்.

'இரத்தக் கண்ணீரு'க்குப் பிறகே தான் சிறந்த வில்லி என்று பிரபலமடைந்ததாகக் கூறும் ராஜம், பண்புள்ள கதாநாயகியின் பாத்திரத்தை ஏற்றும் தான் நடித்து வெற்றி கண்டதாகக் கூறுகிறார்.

"ஒரு கதாநாயகியின் பாத்திரமா, அல்லது ஒருவில்லியின் பாத்திரமா எனக்குப் பிடித்ததென்று என்னால் கூறமுடியாது, நட்சத்திரங்களைத் தெரிவுசெய்வதும் அவரவர்க்கு ஏற்ற பாத்திரத்தை ஒப்படைப்பதும் படத் தயாரிப்பாளரின் கையிலேயே உள்ளது. தத்தமக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரத்தை உணர்ந்து, திறம்பட நடிப்பது மட்டும்தான் நடிகர்களின் கடமையாக அமைகிறது.

### ஆண்கள் விரும்பும் வில்லி

என்னைப் பொறுத்த வரையில் ஒரு ஆலோசனை சினிமாத் தொழிலிலுள்ளவர்களுக்குப் பயன்படலாம்.

1954-ம் ஆண்டிலிருந்து அநேகமாக எல்லாப் படங்களிலும் நான் வில்லியாகவே நடித்து வருகிறேன். அதனால் நடிப்புத்துறையில் திரும்பத்திரும்ப ஒரே முறையைத் தான் கையாளவேண்டியநிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஒரு முறை நடித்தது போலவே மறுபடியும் இன்னொருபடத்தில் நடிக்க வேண்டி ஏற்படுமோ என்ற பயத்தில் பண்புள்ள கதாநாயகியின் பாத்திரத்தையே இனி மேலேற்று நடிப்பதென்று நான் முடிவு செய்துள்ளேன்" — இவ்வாறு கூறும் ராஜம் தன்னுடைய விசிறிகளில் ஆண்கள் பெரும்பாலும் தான் வில்லியாக நடிப்பதையே விரும்புவதாகவும், பெண்கள் ஒரு பண்புள்ள பாத்திரத்தைத் தான் ஏற்று நடிப்பதையே விரும்புவதாகவும் மேலும் குறிப்பிடுகிறார்,

### வில்லியும் ஆபாசமும்

''வில்லியாக நடிக்கும் பெண்கள் அரை நிர்வாணக்கோலத்துடனும். நெறிதவறியவர்களாகவும் சித்தரிக்கப்படுவது அவசியந்தானா என்று என்னால் கூறமுடியவில்லை. வில்லிப் பாத்திரத்தின் தன்மையை வெளியிட இத்தகைய ஆடையலங்காரம் அவசியம் என்று ஒரு நடிகை எண்ணினால் அதைத் தவறென்றும் கூற முடியாது.

நான் கதாநாயகியாகவும் நடித்திருந்த போதிலும் வில்லிப் பாத்திரங்களை ஏற்று நான் நடித்த படங்களே எனக்குப்பெரும் புகழைத் தேடித்தந்தவை, ஆனால் நான் தொடர்ந்து வில்லியாகவே நடிப்பது எனது கணவனுக்குப் பிடிப்பதில்லை, வில்லியாக நடிக்கும் நடிகைகள் கொஞ்சம் தேவைக்கதிகமாக விரசமாக நடிக்க வேண்டும். அப்படி நடிப்பதே நடிகைகளுக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுக்கிறது. மேலும் அத்தகைய நடிப்பைத் தான் கதாநாயகர்களும், ரசிகர்களும்கூட விரும்புகிறார்கள்.

### காதலுக்கு ஒரு வயதா?

வயது போன நடிகர்கள் இன்னமும்காதல் காட்சிகளில் நடிக்கிறார்கள், அவர்கள் தங்கள் வயதுக்கேற்ற பாத்திரங்களையேஏற்றுநடிக்கவேண்டும் என்று சிலர் கருதுகிறார்கள். அதுதவறு.ஆங்கிலப்படங்களிலெல்லாம் முதிர்ந்த சோடிகள் காதல் கட்டங்களில் நடிக்கும் போது நாம் வெகுவாக ரசிக்கத்தான் செய்கிறோம். காதல் காட்சிகளில் தோன்றுபவர்களுக்கு அவர்களது வயது எந்தவித இடையூறும் செய்யவில்லை, தமக்குக் கொடுத்த பாத்திரத்தை நடிகர்கள் எவ்விதம் திறமையோடு நடிக்கிறார்கள் என்பதையே பெரும்பாலான ரசிகர்கள் கவனிக்கிறார்கள். அவர்கள் வயசைப்பற்றி அதிகம் கவனிப்பதில்லை." என்று கூறிய எம், என். ராஜம் தான் இப்பொழுது எழுபத்தைந்துக்கதிகமான படங்களில் நடித்துள்ளாரென்றும், தான் முதல் முதல் நடித்தது, 'நல்லதம்பி' என்ற படத்தில் என்றும், தன் வாழ்நாளில் என்றுமே மறக்கமுடியாதவர் ஒருவர் உண்டென்றால் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒருவர் தான் என்றும் குறிப்பிட்டார்.

## படத்தயாரிப்பாளர் பாலச்சந்தர்

எஸ். பி. தியேட்டர்ஸ்' என்ற புதிய படத்தயாரிப்பு நிறுவனமொன்றை நடிகர் எஸ். பாலச்சந்தர் ஆரம்பித்துள்ளார். இந்த நிறுவனம் தயாரிக்கும் முதலாவது படத்தில் நடிக்கவிருக்கும் நடிகர், நடிகைகள் எல்லோருமே புதுமுகங்கள் தானாம்!

இதில்இன்னொரு விசேஷம் என்னவென்றால், இப்படத்தின் திரைக்கதையை பாலசந்தரே எழுதுவதுடன், டைரக்ஷன், இசையமைப்பு ஆகியபொறுப்புகளையும் அவரே ஏற்றிருப்பதுதான்!



"ரொக் ரொக் ரொக்...... ரொக் அன் த ரோல்!"

## சுழல் நாற்காலியில் இருந்து பார்க்கும் வட்ட சினிமா!

சென்ற ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற கண்காட்சியொன்றில் ஏராளமானபேர் "ஸர்க்காரமா" என்ற நூதன சினிமாவைப் பார்த்து ரசித்தனர், வட்டசினிமா சமீபத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப் படவில்லை. நீண்டகாலத்திற்கு முன்பே கண்டுபிடிக்கப் பட்டது. ஆனால் அதிக செலவு ஆவதன் கராணமாக அமுல் செய்யப்படவில்லை. இம்மாதிரிவட்ட சினிமா ஒன்று ஹம்பர்க்கில்—நிரந்தரமாக அமைக்கப்பட விருக்கிறது. படம் பார்ப்பவர்கள் உட்கார தானே சுற்றும் ஆசனம் அமைக்கப்படுமாம்.

ஹம்பர்க் (டாட்)—உலகினிலேயே மிகவும் நூதனமானதும் நவீனமானதுமான வட்ட சினிமா ஒன்று ஹம்பர்க் நகரில்சினிமாப்படத் தயாரிப்பாளர், அடல் பெர்ட் பால்டெஸ் என்பவரால் அமைக்கப் படவிருக்கிறது. இதற்கு "ஸினிடேரியம்" என்றுபெயர். இதுவரை வெளி வந்துள்ள 'சினிமாஸ்கோப்' டேட்-ஏஓ', 'ஸினிமிரகிள்' 'சினிமா' முதலிய எல்லாமுறைகளையும் விட புரட்சிகரமானதாகும்.

எல்லாப் புறத்திலும் வட்ட சினிமா திரை அமைத்துப் படம் காட்டுவதென்பது இப்போது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டது அல்ல. 1900-ம் ஆண்டு பாரிஸில் நடந்த கண்காட்சியில் 12 காமிராக்களை வட்டமாக இடம் விட்டு இடம் வைத்து சினிமாப்படம் தயாரிக்கப் பட்டு 12 புரொஜெக்டர்களை வைத்து வட்ட திரையில் படம் காட்டப்பட்டது. இம்முறை—தான் இப்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

அப்போது இதைப் பார்த்தவர்கள் வியப்படைந்து விட்டனர். இம்மாதிரி படங்களைத்தயாரித்துத் திரையிட ஏராளமாகச் செலவானது காரணமாக இம்முறை கையாளப்படாமல் விட்டுவிடப் பட்டது

அப்போது வட்ட சினிமா முறையில் காணப்பட்ட சில குறைகள் இப்போது நீக்கப்பட்டு விட்டன என்று அடல் பெர்ட்பால்டெஸ் கூறுகிறார். இதற்காக வென்றே ஒரு புது முறை 'லென்ஸ்" கண்ணாடியும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.

இதற்கான மண்டபம் ஒரு பெரிய டென்னிஸ் பந்தின் மேல்பாகம் போல அமைந்திருக்கும். வட்டத்தின் திரையில் படம் விழும்படி செய்யப்படுவதால் ஒருவர் எப்பக்கம் திரும்பினாலும் படம்பார்க்க முடியும். இதனால் படத்தில் நிகழும் சம்பவத்திற்கு இடையே படம் பார்ப்பவர் இருப்பதாக ஒரு பிரமை ஏற்படுகிறது.

உதாரணமாக ரயில்வேக் காட்சி ஒன்று காட்டப்படுவதாக இருந்தால் படம் பார்ப்பவர் அந்த ரயில் வண்டியின் பெட்டி ஒன்றில் உட்கார்ந்து பயணம் செய்வதுபோல ஒரு பிரமைஏற்படும் தினம் வாழ்க்கையிலேயே எவ்வளவோ முறை பின்னால் என்ன நடக்கிறது என்று பார்க்கத் திரும்புகிறோம். அதேபோல சினிமாவிலும் பின்னால் பார்க்கும் படியான உணர்ச்சி ஏற்படும்.

திரையில் விழும் காட்சி மூன்று ''டைமன்ஷன்" அதாவது அகலம், நீளம், கனமும் கொண்டதாக இருப்பதால் பார்ப்பது சினிமா என்பதையும் பார்ப்பவர்கள் மறந்து படத்தின் கதையுடன் ஒன்றிவிடுவார்கள். மோட்டார் வண்டி நேராக வருவதைப் பார்த்து அதற்கு இடம் விட்டு ஒதுங்கிவிடலாமா என்று படம் பார்ப்பவர்கள் திகைக்கும்படியாக இருக்கும், இந்த வட்ட சினிமா இன்னும் நாளடைவில் எவ்வித குறைபாட்டுக்கும் இடம் இல்லாதபடி அமையக் கூடும். இந்த வட்ட சினிமா இப்போது கண்காட்சிகளில் மட்டுமே இடம்பெற்றுவருகிறது. இந்த வட்டசினிமா உலகமெங்கும் பரவி மக்களைப் பரவசப் படுத்தும் நாள் வெகு தூரத்தில் இல்லையென்று பால்டென் கருதுகிறார்,

புத்திசாலிப் பெண் என்று நினைத்தேனே! நீ ஏன் இப்படி நடந்து கொண்டாய்? நான் சாகப்போகிறவள்; பின் விளைவுகளைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்' என்று நினைத்தாயா?

விதி உன்னைப் பிழைக்க வைத்து விட்டது. ஆனால் உன் வாழ்வு சின்ன பின்னமாகி விட்டதே! உலக அபவாதத்தைத் தாங்கமுடியாமல் தாங்கி நிற்கும் உனக்கு ஊன்றுகோல் உன்னைப் பெற்றவள் மட்டுந்தான். அவளுக்குப் பின் உன் காலத்தை எப்படி நீ ஓட்டப் போகிறாய்?

அம்பிகா, நீ ஏன் அப்படி நடந்துகொண்டாய்? உன் புத்தி பேதலித்து விட்டதா?

உலகம் என்னைத் தூற்றுகிறது. அதை நான் பொருட்படுத்தப் போவதில்லை. என் கவலையெல்லாம் உன்னைப்பற்றித்தான். வேண்டுமென்றே உன் வாழ்க்கையை நீ கெடுத்துக் கொண்டாயே........

நீ ஒரு விடுவிக்க முடியாத புதிர் அம்பிகா, பத்து மாதம் சுமந்து பெற்றபாலகனை நீ பக்கத்தில் கிடத்திக் கொண்டு பிரசவ ஆஸ்பத்திரியில் படுத்திருந்த காட்சி இப்பொழுதும் என் அகக் கண்ணில் தெரிகிறது. மஞ்சள் கொடி போல நீ கட்டிலில் படர்ந்து கிடந்தாய். உன் கண்கள் ஜீவனற்று நிலைகுத்தி நின்றன.

''பிழைக்கமாட்டாள்'' என்ற டாக்டரின் வாயிலிருந்து உதிர்ந்த அந்த ஒருவசனம் உன் கணவனை, உன்னைப் பெற்றவளை, என்னை எல்லோரையுமே அதல பாதாளத்தில் தள்ளி விட்டது. நீ உன் சக்தியை எல்லாம் கூட்டி என்னைச் சைகை காட்டி அழைத்தாய், நடுநடுங்கிய—தெளிவற்ற குரலில் கூறினாய்:

''என்பாலனை உன்னிடம் ஒப்படைக்கிறேன் அண்ணா. உத்தமன் என்று அவனை உலகமெலாம் கொண்டாட வளர்த்துவிடு''

எல்லோர் முன்னிலையிலும் நீ இப்படிக் கூறியதன் அர்த்தமென்ன? நீ சொன்னதைக் கேட்டதும்உன்கணவனின் முகம் எப்படி விகாரமாக மாறியது. நீ உயிருக்குப்போராடிக்கொண்டிருக்கிறாய் என்பது தெரிந்தும் அவன் உடனடியாக ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி விட்டானே! குழந்தையை நீ என்னிடம் ஒப்படைத்தது அவன் உள்ளத்தை எவ்வளவு தூரம் பாதித்து விட்டது என்பதை அதிலிருந்து உன்னால் புரியமுடியவில்லையா?

கணவன் இருந்தும் இன்று நீ வாழா வெட்டி. உன் அம்மாவின் நிழலில் எத்தனை காலத்துக்குத் தான் உன்னால் வாழமுடியும்? கட்டிய கணவன் உன்னைச் சந்தேகிக்கிறான்; பெற்றவள் உன்னைச் சந்தேகிக்கிறாள்; ஏன், இந்த உலகமே உன்னைச் சந்தேகிக்கிறது!

※ ※ ※ ※

யார்வேண்டுமானாலும் என்னைச் சந்தேகிக்கட்டும். அதற்காக நான் கவலைப்படப் போவதில்லை. என்னால் கணேஷ் அண்ணாவுக்கு இழுக்கு வந்து விட்டதே என்பதை நினைக்கத்தான் வருத்தமாயிருக்கிறது. யாருக்குத் தெரியாவிட்டாலும் உனக்கு நன்றாய்த் தெரியுமே அம்மா.

எனக்கும் கணேஷ் அண்ணாவுக்கும் எந்த வித உறவும் இல்லைத்தான். அதனால் அவர் அந்நியராகி விடுவாரா? சிறு பராயத்தில் அவர் முதுகில் ஏறி நான் குதிரைச் சவாரி செய்தது எனக்கு இப்பொழுதும் நினைவிருக்கிறது. புத்தகப் பையோடு முதன் முதல் நான் பள்ளிக்கூடம் சென்றதே அவர் கையைப் பிடித்துக் கொண்டுதான், உனக்குத் தெரியாதா அம்மா! ஆக உடன் பிறந்தால் மட்டுந்தான் அண்ணனா?

சிறுகதை

# தாய்

இந்த உலகில் மழைபெய்கிறது என்றால் அது கணேஷ் அண்ணன் இந்த உலகில் வாழ்வதனால்தான் என்று நம்புபவள் நான். அவர் உத்தமர். சிறந்த அறிவாளி. மனிதன் எப்பொழுதும் நல்லதையே செய்ய வேண்டும் என்று கருதுபவர்........

எனக்கும் அவர் நல்லது செய்வதாகத்தான் நினைத்தார் அம்மா. அழகு, அந்தஸ்து, உயர் குடிப் பிறப்பு எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவர் என்ற காரணத்தால் உன்மருமகனை எனக்குத் தேடித் தந்தார். அவரது உண்மைச் சொரூபத்தை கணேஷ் அண்ணனால் எடைபோடமுடியாமற் போய்விட்டது.

அம்மா, நீ நினைப்பாய் உன் மருமகனிடம் ஆகக்குடிப்பழக்கம்மட்டுந்தான் இருந்ததென்று. எங்கள் பொருளையெல்லாம் ஆறு மாத காலத்துள் அவர்குடித்துத் தீர்த்து விட்டார் என்று நீ எண்ணிக் கொண்டிருக்கிறாய். அது தவறு. அவருக்கு வேண்டியவர்கள் கைவசம் எங்கள் பணத்தில் பாதி இன்னமும் இருக்கிறது. கட்டியகணவனின் நிழலில் வாழ்வதுதான் ஒரு பெண்

**தாழையடி சபாரத்தினம்**

ணுக்குச் சிறப்பு என்று கணேஷ் அண்ணன் கூறியதால் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வாழ்க்கையை ஓட்டினேன்.

உலகில் தீயபழக்கங்கள் எத்தனை உண்டோ அத்தனைக்கும் உறைவிடம் என்கணவர்தான். 'தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்' என்ற முதுமொழியை நான் மறந்துவிடவில்லை. ஆனால் உண்மையைச் சொல்லியாக வேண்டிய கட்டம் வந்து விட்டது; அதனால் சொல்லுகிறேன்.

இத்தனைக்கும் என்கணவனை நான் வெறுக்கவில்லை. வெறுக்க என்னால் முடியவில்லை. கணேஷ் அண்ணனோடு சிறுவயதிலிருந்து பழகியதாலோ என்னவோ 'கல்லென்றாலும் கணவன்' என்ற எண்ணம் என்உள்ளத்தில் நிலைத்து நின்றது. இன்னமும் நான் அவரை வெறுக்கவில்லை. ஆனால், அவர்தான் என்னை வெறுத்துத் தள்ளி விட்டார்.

அம்மா! நீசொல்வதுபோல் அவர் காலில் போய் நான் ஒருபோதும் விழமாட்டேன். என் மேல் அவர் வேறு எந்தக் குற்றத்தைச் சாட்டியிருந்தாலும் யார்மீது தப்பு என்று ஆராயாமல், நானாகவே சென்று அவர் காலில் விழுவேன். ஆனால் அவர் என்மீது சுமத்தியிருக்கும் பழிசாதாரணமானதல்ல,இந்தநிலையில்தன்மானமுள்ள ஒருபெண்—நிரபராதியான ஒரு பெண், எப்படி நடப்பாளோ—எப்படி நடக்கவேண்டுமோ, அப்படித்தான் நானும் நடக்கிறேன். கணேஷ் அண்ணன்கூட இதைத் தப்பு என்று சொல்லமாட்டார்.

ஏனம்மா ஒருமாதிரியாகப் பார்க்கிறாய்? கணேஷ் அண்ணனின் பெயரைக் கேட்க உனக்கு வெறுப்பாயிருக்கிறதா? அவரால்தான் என் குடும்பம் கலைந்தது என்று நீ நினைக்கிறாய்; என்னால் ஒரு நல்லவருக்கு இழுக்கு வந்து விட்டதே என்று நான் கவலைப்படுகிறேன்.

கவலைப்படாதே அம்மா! ஒருபெண் எப்பொழுதும் ஒரு ஆணின் நிழலில்தான் வாழ வேண்டும் என்று நீ கூறுவதை நான் பிழை என்று மறுக்கவில்லை. ஆனால் அந்த ஆண் மொட்டை மரமாக நிற்கும்போதுபெண் போய் ஒதுங்க நிழல் ஏது? இந்த உலகிலேயே ஒப்பிலாஉத்தமர் என்று நான்போற்றிவரும் ஒரேயொரு மனிதரை என்கணவர் சந்தேகித்து விட்டபோது என்னால் எப்படியம்மா அதைச் சகிக்கமுடியும்?

※ ※ ※ ※

அம்பிகா, இந்த இடத்தில்தான் நீ தவறு செய்து விட்டாய். உதரத்தில் வைத்து உயிர் கொடுத்த தாயும், வளர்த்து ஆளாக்கி விட்ட தந்தையும், உடன்பிறந்தவர்களும் ஒருபெண்ணுக்குத் திருமணமாகும் வரையில் தான். உன்னைப் பெற்றவளை உன் கணவன் வெறுக்கிறானென்றால் நீயும் அவளை மறந்துவிடவேண்டியதுதான்' அதைவிட்டுக் கணவனைத் தள்ளி விடுவதா?

ஆதியிலிருந்தே நீ என்னோடு நெருங்கிப் பழகுவதை உன் கணவன் சந்தேகிக்கிறான் என்று தெரிந்தும் என்மனம் புண்பட்டுவிடுமே என்பதற்காக நீ மறைத்து வைத்திருக்கிறாய். நீ செய்தது மாபெருந் தவறு அம்பிகா, அதன் விளைவைத்தான் இப்பொழுது நீ அனுபவிக்கிறாய். மரணப் படுக்கையில் நீ இருந்தபோது நீ பெற்ற செல்வத்தை என்னிடம் ஒப்படைத்தாயே, அந்தச் சம்பவம் அவன் உள்ளத்தில் புகைந்து கொண்டிருந்த சந்தேகத் தீக்கு எண்ணெய் வார்த்தது போல் அமைந்து விட்டது.

உன்கணவன்குடிகாரனாயிருக்கலாம்; சூதாடியாயிருக்கலாம்; காமுகனாயிருக்கலாம்; அதற்காக நீ செய்த தவறை மறைக்க முடியாது. உனக்கு மட்டுந்தான் இப்படி ஒருகணவன் வாய்த்து விட்டானா? உன்னைப் போல எத்தனையோ பெண்களுக்கு இப்படியான அவல வாழ்வு கிடைத்திருக்கிறது. தமிழ்ப்பெண்கள் அதற்காகக் கணவன்மாரை வெறுப்பதில்லை, அவர்களைத் திருத்துவதற்காக எத்தனையோ பெண்கள் வாழ்க்கையோடு பயங்கரப்போராட்டங்கள் நடத்தியிருக்கிறார்கள்.

உன்கணவன் தீயவன்தான். அதனால் அவனுக்குப் பிறந்தகுழந்தையை நீ என்னிடம் ஒப்படைக்கலாமா? பெற்றெடுத்தவள் நீயென்றால் சகலஉரிமையும் உன்னுடைய தாகிவிடுமா?

※ ※ ※ ※

தவறென்றால் மன்னித்துவிடு அண்ணா. நீதானே சொன்னாய்; 'பிறப்பினால் ஒருவன் நல்லவனாகவோ கெட்டவனாகவோ முடியாது, சூழல்தான் அவனை மாற்றி அமைக்கிறது' என்று. தாம்பத்திய வாழ்வில் சுகங்காணாத என்னிடம் பேறடைந்ததும் தாய்மை உணர்ச்சி தளிர் விட்டது. நான் பெற்றெடுத்த செல்வம் நாலு பேர் மத்தியில் நல்லவனாக வாழவேண்டு மென்றால் அவன் வளரும் சூழல் நல்லதாக அமைய வேண்டும் என்று ஆசைப்பட்டேன். என்கணவரின் அரவணைப்பில் அவன் வளர்ந்தால் உத்தமனாக உருவாக மாட்டான் என்று தோன்றியது. நான் இனிப் பிழைக்க மாட்டேன்என்று டாக்டர் கூறியதும் என்தாய்மை உணர்ச்சி தலைதூக்கியது. என் உள்ளத்தின் சூன்ய வெளியிலே எஞ்சி நின்றதெல்லாம் பிள்ளைப் பாசம் ஒன்றுதான். அவனை உன்னிடம் ஒப்படைத்தால்தான் எனக்குச்சாந்திகிட்டும் என்று நினைத்தேன்........ ...


※ ※ ※ ※

பாவம், நீ என்ன செய்வாய்! உன்பிள்ளையின் நல்வாழ்வு மட்டும் தான் உன் உள்ளத்தில் பேலோங்கி நின்றதால் உன்வாழ்வைக் கெடுத்துக் கொண்டாய், நீ தாய்— அதிசயமான தாய்!

## ஈழத்து எழுத்தாளரிடமிருந்து சில சுவையான தகவல்கள்:

பேட்டி:- ரமணன்

# இ. நாகராசன்



நீங்கள் எதற்காக எழுதுகிறீர்கள்?

எழுதுவதே என்னுடைய தொழில்!

ஏதாவது சம்பவங்கள்தான் தங்களை எழுதத் தூண்டியதா? அல்லது எழுதவேண்டும் என்பதற்காக எழுதுகிறீர்களா?

குறிப்பாக எந்தச் சோதனைகளோ அல்லது சம்பவங்களோ என்னை எழுதத்தூண்டவில்லை! சிறுவயதில் எனக்கு ஏற்பட்ட கதை ஆசைதான் என்னை எழுதத் தூண்டியது, நான் மலைநாட்டில் பள்ளி ஆசிரியனாக இருந்ததன் காரணமாக அங்கு ஏற்பட்ட அனுபவங்களும் சூழ்நிலையும் நிறைய எழுதவாய்ப்பளித்தன. இதனால் எழுதியே வாழக்கூடிய வாழ்க்கையை உருவாக்க வேண்டுமென்ற குறிக்கோள் மலைநாட்டு அட்டைபோல் என் உள்ளத்தில் ஒட்டிக் கொண்டது!

எழுத்துலக வாழ்க்கையில் தங்களுக்கு மறக்கமுடியாத சம்பவங்கள் ஏற்பட்டதுண்டா?

உண்டு. நான் எழுதிய கவிதைகளில் ஒன்று 1948-ம் ஆண்டு முதன் முதலில் 'சுதந்திரன்' பத்திரிகையில் வெளிவந்த போது எனக்கேற்பட்ட மகிழ்ச்சி எழுத்தில் அடங்காதது! என்னுடன் பரிச்சயமானவர்களுக்கெல்லாம் அதனைக் கொண்டு சென்று வாசித்துக் காட்டி சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொண்டேன் அதை இப்போதும் நினைத்துக்கொள்வதுண்டு.

கடந்த சில காலத்துக்குள் இலங்கையில் ஓர் இலக்கிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதாகச் சிலர் கூறுகின்றனர். பலர் அதைமறுக்கின்றனர்! இதுபற்றித்தங்கள் கருத்தென்ன?

கடந்த சில காலத்துக்குள்தான் இலங்கையில் இலக்கிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டதெனக்கூறிவிடுவதற்கில்லை. ஆனல் இப்பொழுதுள்ள பரபரப்பு புஸ்வாணமாகத் தீர்ந்துவிடாமல் வண்ண வண்ண மத்தாப்புத்துளிகளை உற்பத்திசெய்ய வேண்டுமென்பது என் அவா!

முற்போக்கு எழுத்தாளர் பற்றிய தங்கள் கருத்தென்ன?

வல்லவர்கள். எதற்கும் தாங்கள் தான் முன்னேடிகள் எனக் கருதும் மனப்பான்மை அவர்களுள் சிலரிடமிருக்கிறது! அதை நீக்கிவிடவேண்டும். இலக்கியத்துக்கு வாழ்க்கையைமுன்னேற்றும் இலட்சியம் உண்டு. எனவே பிற்போக்கு இலக்கியமும் உண்டென மறைமுகமாகச் சுட்டுவது தவறென நினைக்கிறேன்!

வசன கவிதைபற்றித் தங்கள் கருத்தென்ன?

வசன கவிதை என்பதில் என்றும் உடன் பாடில்லாதவன் யான். வைத்தால் குடுமி, சிரைத்தால்மொட்டை என்ற வாக்கில் வசனம் அல்லது கவிதைதான் இருக்க வேண்டும். அனுபவ உணர்ச்சிகளை அறிவு என்ற உலையில் புடம் போட்டு எடுத்த இலக்கண அமைவுக்குள் இசை என்ற சுருதியுடன் வார்க்கப்படும் கலாசிருஷ்டிகள் தான் கவிதை என்பது எனதுதிடமான கருத்து.

உங்களுக்குக் கவிதையிலா அல்லது சிறு கதையிலா அதிக ஈடுபாடு?

பலவந்தமான சிருஷ்டிகளில் நம்பிக்கை அற்றவன் நான். தொழில் முறையில் அவ்வித அவஸ்தையில் ஈடுபட்டிருப்பினும் அவை ஆத்ம திருப்தி தராதவையே! ஒரு உணர்ச்சியையோ அல்லது அனுபவத்தையோ எந்த உருவத்தில் வாசகனுக்குக் கொடுப்பதுசிறந்ததுஎன எனக்குப் படுகிறதோ அந்தஉருவத்தில் கொடுக்கிறேன். இரண்டுபெண்டாட்டிக்காரன்முன் இருவரையும் நிறுத்தி விட்டு இருவருள் எவர் மீது அதிகம் பற்று எனக் கேட்பது போலிருக்கிறது உங்கள் கேள்வி!

கூட்டு முயற்சியில் அடிக்கடி ஈடுபடுகிறீர்களே! சொந்தக்காலில் நம்பிக்கையில்லை என்பதுதானு இதற்கு காரணம்?

சொந்தக் காலின் பலத்தில் என்றைக்குமே எனக்கு அசைக்க முடியாதநம்பிக்கையுண்டு. ஆனல் புதிய சோதனையில் உள்ள பற்றும் ஓரே கதையில் ஒற்றுமையில் வேற்றுமையை புலப்படுத்தும் சந்தர்ப்பமும் இந்தக் கூட்டு முயற்சியில் ஏற்படுகின்றது.

உங்களது கதைகளில் கவித்துவ ஈடுபாடு இருப்பதாகக் கூறுகிறீர்களே! காரணம் என்ன?

யான் கவிஞனுக இருப்பதால் அப்படிக் கூறிவிடுகிறீர்கள் போலும். ஆனல் யான் சிறுகதையோ அல்லது கட்டுரையோ எழுதும் பொழுது கவிஞன் என்ற நினைப்பை இழந்து தான் எழுதுகிறேன்

அரசியல் பத்திரிகையான தமிழனில் பணிபுரிவதன் மூலம் உங்களை வளர்த்துக் கொள்ள முடிகிறதா?

எனது வளர்ச்சியைப்பூரணப்படுத்துவதற்கும், எந்தத் துறையையும்திறம்படஎழுதவேண்டுமென்ற, நம்பிக்கையை உண்டாக்குவதற்கும்'தமிழன்' கைகொடுத்துள்ளது. கவிதை, சிறுகதை ஆகியவற்றில் மட்டுமே ஈடு பாடு கொண்ட என்னை அரசியல் ஈடு பாடு கொண்டவனுக்கி அதிலும் பரிச்சியம் பெறவைத்தது தமிழனும்.

இன்று இலங்கையில் தங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்?

எனது நட்பிற்குப் பாத்திரமான எழுத்தாளர்களைக்குறிப்பிட்டுச் சொன்னல் பட்டியல் நீண்டு விடும். ஆனல் இலக்கிய சிருஷ்டிகளைப் பொறுத்தவரை சிறு கதை, நாவல் விமர்சனம், நாடகம் ஆகிய துறைகளில் பல பரிசோதனைகள் செய்து நல்ல வெற்றியைக் கண்டிருக்கும் திரு எஸ். பொன்னுத்துரையே எனக்குப் பிடித்தவர்.

முற்போக்கு எழுத்தாளர்கள் கூட்டிய எழுத்தாளர் மகாநாடு பற்றிய தங்கள் கருத்தென்ன?

இலங்கையில் முதன் முதல் எழுத்தாளர் மகாநாட்டைக் கூட்டிய பெருமைமுற்போக்கு எழுத்தாளர்களுக்குத் தான் உரியது. அதற்காகஅவர்களைப் பாராட்ட வேண்டும்! ஆனல் மற்றவர்கள் இப்படியான மாநாட்டைக் கூட்டுவதற்கு அருகதையற்றவர்கள் என்ற கருத்து அங்கு அடிபட்டதைத்தான் என்னல் சகிக்க முடியவில்லை!

மகாநாட்டில் பல தில்லுமுல்லுகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். உண்மையா?

கோணல் பார்வை எனக்குக் கிடையாது!

ஈழத்துக்கவிஞர்களில் யாருடைய கவிதைகளின் மீது தங்களுக்கு ஈடுபாடு!

கவிதையைப் பொறுத்தவரையில் நான் எவரையும் பின்பற்றுவதோ சோதனை செய்து பார்ப்பதோ கிடையாது. ஏறக் குறைய ஒவ்வொருவருடைய கவிதைகளையும் படித்துப் பார்ப்பதுண்டு.

## இத்தால்... சகலரும் அறிவது!

### அனுதாபந் தெரிவிக்காததேனே?

20-5-62 'புதினம்' மாலாவின் வன்மை மிகு ஓவியம், ராஜபாரதியின் சிந்தனைச் சூழலில் சிதறிய சிறந்த கவிதை— புதினத்தின் ஆசிரியர் கருத்துரை என்மனதைக் கவர்ந்தது மட்டுமன்றி இதழின் அமைப்பையும் தரத்தையும் மேலும் உயர்த்தியுள்ளது! இலங்கை ஜனநாயக காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கே. ஜி. எஸ். நாயரின் அகால மரணம் குறித்து சிறு அனுதாபம் தெரிவிக்க 'புதினம்' மறந்தது பெரும் வியப்பாக இருக்கிறது.

மட்டக்களப்பு, — செழியன் ஜே. பேரின்பநாயகம்.

### வேறு எவராலும் முடியாது

தமிழரசுக் கட்சித் தலைவர்கள் உள்ளத்தால் ஒழுகுபவர்கள். இவர்கள் எமது உரிமைகளுக்காக, பேச்சுவார்த்தைகள் பயன்தராததால்தான் சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு இயக்கங்களில் ஈடுபட்டார்கள். இனியும் அப்படியே செய்வார்கள். தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியால் தங்களது உரிமைகளை நிச்சயம் பெற்றே தீருவார்கள்.

இந்த நேரத்தில் தமிழ் மக்கள் தங்களது கட்சியின் கீழ் ஒன்றுபட வேண்டும் என்று கூறும் சில தலைவர்களுக்கும், அவர்களை நம்பலாமா என எண்ணும் தமிழ் மக்களுக்கும் ஒன்று கூற விரும்புகிறேன். பேச்சுவார்த்தை, சத்தியாக்கிரகம், சட்டமறுப்பு ஆகிய எல்லா வழிகளாலும் போராடியும் தமிழரசுக்கட்சி தமிழர்களது உரிமைகளைப் பெறமுடியாவிட்டால் கேவலம் பேச்சுவார்த்தை ஒன்றைமட்டுமே நம்பியிருக்கும் உங்களால் எப்படிப் பெறமுடியும்?

ஒன்றுபட்ட தமிழினத்தைச் சிதறடிக்கும் முயற்சி எம்மத்தியில் வேண்டவே வேண்டாம்.

சங்குவேலி, — பொ. சண்முகநாதன்

### சிறுகதைப் போட்டி நடத்துங்கள்

6-5-62 ல் 'புதினத்தில் மலர்ந்த "இங்கேதான் இன்பம் இருக்கிறது" என்ற சிறுகதை அற்புதம் அதைஉருவாக்கியவருக்கு என் பாராட்டுக்கள். 'புதினம்' சிறுகதைப் போட்டி ஒன்று நடத்தினுல் என்ன?

திருகோணமலை, — செல்வி கமலாஜனி ஏரம்பு.

### பணம் வீணுகிறதே!

கொழும்பில் இருக்கும் தமிழ்மக்களிடம் இருந்து தினம் பலரூபாக்கள் பாராட்டு, வாழ்த்து தந்திகளுக்காக செலவிடப் படுகின்றன. இதனல் சம்பந்தப்பட்டவர் கணநேர இன்பம் அடைவார் என்பது உண்மை. எனினும் இதனல் வீணை விரயம் ஏற்படுகின்றதே. இது தடுக்கப்பட வேண்டும். வாழ்த்துப் பாட்டுக்களைத் தபால் அட்டைமூலம், கடிதமூலம் தெரிவித்தால் பணம் மீதப்படுகிறதல்லவா. எமது பணம் அநியாயமாக விரயமாவதைப் பல வழிகளாலும் தடுத்து நிறுத்த வேண்டும்.

வெள்ளவத்தை — வா. குவேனி

### தரம்குறைய விடாதீர்!

சிறுகதை எழுதவேண்டும் என்னும் ஒருநோக்கத்துக்காக எழுதப்படும், கருவற்ற, தகுதியற்ற. தரமற்ற கதைகளை 'எழுதி அனுப்பிவிட்டார்களே' என்னும் நோக்கோடு பிரசுரித்து வந்தீர்களேயானல் புதினத்தின் தரமும் குறைந்து வாசகர்களின் நன்மதிப்பையும் பெற முடியாது போய்விடும்.

திருகோணமலை —செல்வி. சரோ ஏரம்பு

### ஈழத்து எழுத்தாளர் குறைந்தவரோ?

ஈழத்துத்தமிழ் எழுத்தாளர்களை ஒன்று சேர்த்து, தரமான படைப்புக்களுக்கு மதிப்பளித்து, தமிழ் நாட்டு எழுத்தாளர்களுக்கு ஈழத்து எழுத்தாளர்கள் குறைந் தவர்களல்லர்; என்ற பெருமையை நிலைநாட்ட ஈழத்தமிழர் மத்தியில் செல்வாக்கும் பெற்று வளரும் "புதினம்" பணிபுரிய வேண்டும்.

செங்கலடி —சோமு இளந்திரையன்.

## விபசாரியா, கொலைகாரியா?

# தோம்சனை நஞ்சூட்டி கொல்ல கள்ளக் காதலர்கள் சதி!

வீட்டை விட்டு உடனடியாக வெளியேறும்படி பேர்ஸி தோம்சன் கூறியும் பைவாட்டேர்ஸ் உள்ளே போய் உட்கார்ந்துகொண்டு சண்டித்தனம் செய்தான். வெளியேற முடியாது என்று அவன் அடம் பிடிக்குமளவுக்கு எடித் தோம்சன் மீது பைவாட்டேர்ஸ் பைத்தியமாயிருந்தான்.

வீட்டுக்கு உடையவன் பேர்ஸிதோம்சன். அவன் வெளியேபோ என்கிறான். போகத்தானே வேண்டும்...... சம்பவம் நடைபெற்ற மறு வெள்ளிக்கிழமை பைவாட்டேர்ஸ் தானாகவே வீட்டை விட்டு வெளியேறி விட்டான்,

ஆனால், அவன் உள்ளத்தில் புயல் சீற ஆரம்பித்துவிட்டது. 'பேர்ஸி தோம்சன் வீட்டுக்கு மட்டுந்தான் சொந்தக்காரனா? நான் உயிராகக் காதலிக்கும் எடித்துக்கும் உடையவன் அவன்தான். தனது உரிமையைப் பயன் படுத்தி எங்கள் இன்பத்துக்குக் குறுக்கே அவன் நிற்கிறான். இதற்கு எப்படி ஒரு முடிவுகாண்பது.

வீட்டை விட்டு வெளியேறிய சில நாட்களில் பைவாட்டேர்ஸ் கடமையாற்றிய 'மோரியா' என்ற கப்பல் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டதால் அவனும் அதில் செல்லவேண்டி ஏற்பட்டது. அவன் கப்பலில் செல்வதற்கு முன்—அந்தக்குறுகிய இடைக்காலத்தில் எடித் இரண்டுகடிதங்கள் அவனுக்கு எழுதிவிட்டாள். ஒகஸ்ட் 11 ம் திகதி எடித் எழுதிய முதற் கடிதத்தில் ''ஈடு இணையிலா என் இதயத் தெய்வமே'' என்று பைவாட்டேர்ஸை அவள் விழிக்கிறாள். தான் எழுதிய ஒவ்வொரு கடிதத்திலும் எடித் தனது பெயரை 'பீடி' என்று குறிப்பிட்டிருக்கிறாள். இது காதலர் இருவருக்கும் மட்டும் தெரிந்த ஒரு இரகசியப் பேர்,

பிரெட்ரிக் இங்கிலாந்தை விட்டுச் சென்றதும் பிரிவாற்றாமையால் துடித்தாள் எடித். அச்சமயம் அவள் பிரெட்ரிக்குக்கு எழுதிய கடிதங்களில் தன் மனநிலையைப் பச்சை பச்சையாக வர்ணித்திருக்கிறாள்.

''நீ வீட்டைவிட்டுச் சென்றதிலிருந்து என்னில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் அவர் உள்ளத்தில் சந்தேக விதையை ஊன்றி விட்டிருக்கிறது .... ''என்கிறாள் எடித்.

கணவன் சந்தேகிக்கிறானென்றால் அவனுக்கும் விஷயம் தெரிந்துவிட்டதோ?

கடைசியில் 'மோரியா' டிசம்பர் மாதம் இங்கிலாந்து வந்து சேர்ந்தது, ஆனால் கப்பல் கரையை அடைந்ததும் அவனால் உடனேயே வெளிச் செல்ல முடியவில்லை. இரண்டு நாட்கள் கப்பலிலேயே இருக்க வேண்டியிருந்தது.

'பிரெட்ரிக்வந்துவிட்டான்' என்ற தகவல் எடித்துக்கு ஏற்கெனவே கிடைத்துவிட்டது. இந்தச் செய்தி பேர்ஸி தோம்சனுக்கு எப்படிக்கிடைத்ததோ தெரியாது. அவன் வேலைக்குக் கூடச் செல்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்திருந்து கண் குத்திப் பாம்பு போல எடித்தின் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டேயிருந்தான்.


கடைசியில் எடித் துணிச்சலோடு வீட்டை விட்டுக் கிளம்பி பிரெட்ரிக்கைக் காணச்சென்றாள்.

குறிப்பிட்ட இடத்தில் இருவரும் சந்தித்தனர். பிரெட்ரிக்கின் கரங்களில் கொடி போலத் துவண்டாள் எடித். '48 மணித்தியாலங்கள் உபயோகமில்லாமல் கழிந்துவிட்டனவே' என்று பச்சாத்தாபப்பட்டாள் அவள்.

''அன்பே, இப்படி நாங்கள் இரகசியமாகச் சந்திப்பதை நினைக்க எனக்கு அவமானமாக இருக்கிறது; உன்னை என்னிடம் ஒப்படைத்துவிடும்படி உன் கணவனிடம் நான் நேரிலேயே சென்று கேட்கப் போகிறேன்'' உணர்ச்சிமேலீட்டினால் ஏதேதோ பேசினான் பிரெட்ரிக். 19 வயதுப் பையன்களின் இயற்கையான சிறுபிள்ளைத் தனம் அவன் பேச்சில் பிரதிபலித்தது. எடித் ஒன்றும் பதில் சொல்லாது தலையை மட்டும் அசைத்தாள்,

சந்திப்பு அடிக்கடி நிகழ்ந்தது; இரவு வெகுநேரம் கழித்து வீடு திரும்பும் மனைவியைப் பேர்ஸி ஏன் என்று கேட்கவில்லை. ஆனால் அவன் உள்ளத்தில் சந்தேகம் வலுத்தது.

எடித் காலையில் வீட்டை விட்டுச் சென்றவள் இன்னும் வீடு திரும்பவில்லை. இரவு பத்து மணிக்குமேலாகி விட்டது; பேர்ஸிதோம்சன் நேராக ரெயில் ஸ்டேஷனுக்குச் சென்று மறைவான ஒரு இடத்தில் உட்கார்ந்திருந்தான். நள்ளிரவில் வந்த ஒரு ரெயிலிலிருந்து எடித்தும் பிரெட்ரிக்கும் இறங்கினார்கள், பேர்ஸி மறைவாக நின்று அவர்களைக் கவனித்தான். காதலர் இருவரும் பிரியும்போது ஒருவரையொருவர் கட்டித் தழுவி முத்தமிட்டுக்கொண்டனர், பேர்ஸி தோம்சனின் உள்ளத்தில் எரிமலை குமுறியது. இதுவரை மனைவியைச் சந்தேகித்துவந்த கணவன் இன்று காதலர் கட்டி முத்தமிட்டதை நேரிலேயே கண்டுவிட்டான். வீட்டில் புயல் வீச ஆரம்பித்து விட்டது.



'எடித்'தும் அவளது இளம்காதலன் பைவாட்டேர்ஸும்

மறுமுறை சந்தித்தபோது அன்றிரவு வீட்டில் நடந்ததைக் காதலனிடம் அப்படியே ஒப்பித்தாள் எடித்.

''கணவன் என்ற உரிமையில்தானே என் ஆருயிர்க்காதலியைத் துன்புறுத்தினான் அந்த அயோக்கியப் பயல்'' உறுமினான் பிரெட்ரிக்,

## 'அசோகன்'

எடித்தின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு பேர்ஸி தோம்சனிடம் வந்தான் பிரெட்ரிக்.

''இவளை விவாகரத்துச் செய்து விடு'' என்று பேர்ஸியை நேரிலேயே கேட்டான்.

முதலில் 'ஆம்' என்று கூறிய பேர்ஸி பின்னால் முடியாது என்று மறுத்தான்.

''அவளுடைய வாழ்க்கையை நீ நரகமாக்குகிறாய்'' என்று கத்தினான் பிரெட்ரிக்,

''அதைக் கேட்பதற்கு நீ யார்?'' என்றான் பேர்ஸி அமைதியாக.

பிரெட்ரிக்கால் பதில் சொல்ல முடியவில்லை. இவர்கள் சம்பாஷணையை ஆவலோடு கேட்டுக் கொண்டு நின்ற எடித்துக்கு எஞ்சியதெல்லாம் ஏமாற்றந்தான்.

அடுத்த சந்திப்பின்போது பிரெட்ரிக், எடித்துக்குக் கூறினான்:

''இனிமேல் அவன் உன்னை அடிக்கமாட்டான். எந்தச் சந்தர்ப்பத்திலும் உன்னைத் துன்புறுத்துவதில்லையென்றும் அவன் எனக்கு வாக்குத் தந்திருக்கிறான்''

எடித் சோகமாகப் புன்னகைத்தபடியே தலையசைத்தாள். அவள் கண்களில் நீர் முட்டி நின்றது. அவளைப் பொறுத்தவரையில் இது மாபெருந் தோல்வி. தனது பிற்கால வாழ்க்கையை அவளால் நிர்ணயிக்கமுடியவில்லை. பிரெட்ரிக் வேலை செய்து வந்த கப்பல் மறுபடி செல்லப்போகிறது. கப்பலில் பிரெட்ரிக்கும் சென்றுவிடுவான். அதன் பின் அவள் கணவனோடு எப்படி வாழப்போகிறாள்? தற்கொலை ஒன்றுதான் பிரச்சினையைத் தீர்த்துவைக்கக்கூடியது என்ற முடிவுக்கு வந்தாள். தனது முடிவை அவள் பிரெட்ரிக்குக்குச் சொல்லத் தயங்கவில்லை,

''தற்கொலை செய்யப் போகிறாயா? அதை நீ மட்டும் செய்ய நான் அனுமதிக்கமாட்டேன். நாங்கள் இருவருமே தற்கொலை செய்துகொள்வோம். ஆனால் அதைக் கடைசியாகத்தான் வைத்துக்கொள்ளவேண்டும். எங்கள் முயற்சி ஒன்றும் பலனளிக்கவில்லையென்றால் முடிவில் தற்கொலை செய்வோம். எனக்கு ஐந்து வருட அவகாசம்கொடு'' என்றான்பிரெட்ரிக். ஆனால் எந்த வழியில் முயற்சி செய்யப்போகிறான் என்பதை அப்பொழுது அவன் திட்டவட்டமாக விளக்கிக் கூறவில்லை.

நவம்பர் மாதம் 11ம் திகதி மறுபடியும் 'மோரியா' இங்கிலாந்திலிருந்து புறப்பட்டுவிட்டது. இனி மறுபடியும் ஜனவரி 7 ம் திகதி தான் பிரெட்ரிக்பைவாட்டேர்ஸ் திரும்பிவருவான், நாட்களை எண்ணிக் கொண்டு அவள் இருக்க வேண்டியதுதான்,

''நீ சென்றபின் அன்றொரு நாள் என் கணவர் என்னை நெருங்கினார். அவர் என்னைத் தொடுவதையே நான் விரும்பவில்லை, 'என் மீது உனக்கு அன்பில்லையா? என்று அவர் என்னைக் கேட்டார். நான் 'இல்லை' என்று துணிந்து கூறிவிட்டேன். அவர்சீறி எழுவார் என்று நினைத்தேன் ஆனால் அவர் கோபிக்காமல் 'முன்பு நடந்தவைகளை மறந்து விடு. நாம் இனிப் புதிய வாழ்க்கையை ஆரம்பிப்போம்' என்று கூறினார். இதற்கு மேல் நான் என்ன செய்யமுடியும்? என் நிலை உனக்குப் புரிகிறதா?'' என்று தன் நிலையைக் காதலனுக்கு விளக்குகிறாள் எடித்.

''எனக்குப் புதிய உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கருதி சதா நடனத்துச்கும் கேளிக்கைகளுக்கும் தன்னோடு வரும்படி அழைக்கிறார், என்னால் போகவும் முடியவில்லை, போகாமல் இருக்கவும் முடியவில்லை, அன்பின் சிகரமே! என் நிலைமை உனக்குப் புரிகிறதா?'' என்று எழுதுகிறாள் எடித்.

நீண்ட நெடும் மூன்று மாதங்கள் அவள் தனிமையில்

[11-ம் பக்கத்தொடர்ச்சி]

❋ நடிகனும் அரசியல்வாதியும் ❋ அழியாத செல்வம் ❋ கவலை இல்லாதவர் ❋ பணமும் குணமும் ❋ காதலும் கல்யாணமும் ❋ நடிகை பத்மினி ❋ கலையால் மக்கள் முன்னேறுகிறார்களா?

# கேள்வி - பதில்!

ரமணன்

செ. கமலாதேவி, தொல்புரம்

கே:- உமக்குத் திருமணம் முடிந்துவிட்டதா?என்னவயது?

ப:- இதைமட்டும் சொன்னால் திருப்திப்படமாட்டீரே! உத்தியோகம் என்ன, வருவாய் என்ன, சாதகத்தை அனுப்புகிறீரா என்றெல்லாம் கேட்பீர் போலிருக்கிறதே!

விசுவர், பொன்னாலை,

கே:- மனித வாழ்வில் அழியாத செல்வம் எது?

ப;- போதுமென்ற மனம்!

ஈ. கே. ராஜகோபால் நவாலி

கே;- காதலின் பின் கல்யாணமா? கல்யாணத்தின் பின் காதலா?

ப:- காதலின்பின் கல்யாணம் கரடுமுரடான பாதை! கல்யாணத்தின் பின் காதல்: ராஜபாட்டை!

எஸ். சின்னத்துரை, கரவெட்டி.

கே:- தற்கால அரசியல் வாதிகளைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப:- தமிழ் அரசியல் வாதிகளைப் பொறுத்தமட்டில் பலருக்குஇதுஒரு 'சைற் பிஸ்னெஸ்' சிலருக்கு ஒரு பொழுது போக்கு!

செல்வி கமலாஜினி திருமலை

கே:- கவலை இல்லாதவர்கள் யார்?

ப:- கவலை இல்லாதவர்களென்றால் யாருமேஇல்லையென்றுதான் சொல்ல வேண்டும். கவலை குறைந்தவர்கள் யாரென்று கேட்டால் சொல்லமுடியும்; சிறந்த ஞானிகளுக்குக் கவலைகுறைவு; முழுமுட்டாள்களுக்கும் கவலைகுறைவு!

என். பத்மசீலன்' யாழ்ப்பாணம்

கே:- தற்கால வாலிபர்கள் மத்தியில் பணமா, குணமா பெரிதாக மதிக்கப்படுகிறது?

ப:- சந்தேகமென்ன, பணந்தான் பெரிதாக மதிக்சப்படுகிறது. அவர்கள்மீது தவறில்லை. உலகமே அப்படி மாறிவிட்டதே! பெண்கள் பட்டுமென்ன, வாலிபர்களின் குணத்தை ஒதுக்கிவிட்டு உத்தியோகத்தையும் பணத்தையுந் தானே பெரிதாக நினைக்கின்றார்கள்!

எஸ். செல்வநாதன், ஏழாலூர்

கே.- நடிசனுக்கும் அரசியல் வாதிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப:- மக்களை மகிழ்விப்பதற்காக நடிகன் நடிக்கிறான், அரசியல்வாதி மக்களை ஏமாற்றுவதற்காக நடிக்கிறான்.

கே:- பொதுத் தேர்தலில் போட்டியிட என்ன தகுதி வேண்டும்?

ப:- போற்றவும் தெரியவேண்டும்; தூற்றவும் தெரியவேண்டும்!

த. பாலச்சந்திரன், கைதடி.

கே:- கலையால் மக்கள் முன்னேறுகிறார்களா, அல்லது மக்களால் கலைமுன்னேறுகிறதா?

ப:- நீர் அதிகம் சாப்பிட்டதால் பெரிதாக வளர்ந்தீரா. அல்லது பெரிதாக வளர்ந்ததால் அதிகமாகச் சாப்பிடுகிறீரா?

கே:- பத்மினி மீண்டும் திரையுலகுக்கு வந்திருக்கிறாரே?

ப:- சினிமாவில் கதாநாயகனைக் கட்டித்தழுவியதெல்லாம் வெறும் நடிப்புத்தானென்று நிரூபிப்பதற்காக இனிவீட்டிலும் நடிக்க வேண்டும் அவர்!

## பரிசுக் கேள்வி

எஸ். ஆர். யேசுதாசன்
4-ம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை

கே:- தமிழில் உள்ள 'அ' தொடங்கி 'ஔ'முடியும்வரையுள்ள உயிர் எழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கருத்துக்கள் உள்ளன. அதைக் கூறுவீர்களா?

ப:-ஒரு கருத்தல்ல ஓர் உயிரெழுத்துக்கு எத்தனையோ கருத்துக்கள் இருக்கின்றன. இருந்தாலும் நான் இங்கு நீங்கள் கேட்டதுபோல் ஒரு, பொதுவான கருத்தையே கொடுக்கிறேன், அ-சிவன்; ஆ-பசு; இ-அன்பு; ஈ- ஒரு பிராணி உ-கட்டளை; ஊ-சந்திரன் எ- ஏழு; ஏ-அம்பு; ஒ-பொருந்து ஓ-வினை ஔ-வியப்பு-

மு. இராமசாமி, பதுளை.

கே: மது, மங்கை இவை இரண்டில், அதிகம் போதை தருவது எது?

ப: கள் உண்டால் மட்டுமே போதை தரும். மங்கையை நினைத்தாலே போதை உண்டாகுமே!—நான் சொல்லவில்லை நீர் இப்படிக் கேட்பீரென்று அறிந்துதான் போலும் 2000 வருஷங்களுக்கு முன் திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

கே; கொழும்பிலிருந்துவெளியாகும் ஒரு பத்திரிகை சதா எஸ். பொன்னுத்துரையைத் திட்டிக் கொண்டிருக்கிறதே?

ப:- உமக்கு ஏனையா அதைப் பற்றிக்கவலை? பொன்னுத்துரையைத்திட்டினால்தான்பத்திரிகை விலைப்படும் என்பது அவர்களின் எண்ணம்! காகம் திட்டியா மாடு சாகப்போகிறது?

ஆர். சுசீலாதேவி, கொழும்பு-6

கே:- ஒரு குடும்பம் சிறப்புடனிருக்க வேண்டுமானால் இல்லாள் எக்குணங்கள் கொண்டவளாக இருக்கவேண்டும்?

ப:- உழைப்பில் மாடு, பொறுமையில் எருமை, மானத்தில் கவரிமான், முயற்சியில் தேனீ!

எஸ். ஆர் சிவபாக்கியம் கொழும்பு 13.

கே;- கன்னத்தில் கறுப்புப் புள்ளியும் நெற்றியில் திலகமும் வைத்துக்கொண்டு வீதியில் போகும் ஒரு பெண்ணை, கண்களில் காந்தசக்தியுள்ள ஒரு வாலிபன் பார்த்து விட்டால் அப்பெண் எம் முறையில் பாதிக்கப்படுவாள்?

ப:- அவளுக்கு வியர்வை ஏற்படும், வர்ணம் கரையும் இவனுக்கு ஏமாற்றம் காத்திருக்கும்.

கே:- நீங்கள் ஒரு நகரபிதாவாக இருந்தால்?

ப:- நான் ஒரு நகரபிதா ஆகும் அளவுக்கு இன்னும் அயோக்கியத் தனங்கள் செய்யவில்லையே!

எஸ். சிவலோசினி பாக்கியநாயகம், மட்டுநகர்

கே:- பொறுமை யாருக்குத் தேவை?

ப:- தற்கால நங்கைகளை திருமணம் செய்யும் மாப்பிள்ளைகளுக்கு!

கே:- வவுனியா மாஜி எம். பி திரு. சுந்தரலிங்கம் மூதூர் தேர்லில் வெல்லுவாரா?

ப-: வென்றால் தான் என்ன? ராஜினாம்செய்வதற்கு அவருக்கு எத்தனை நாள் செல்லப் போகிறது!


சேலம்
S. V. R. கண்டர் R. I. M. P, அவர்கள் தயாரிக்கும்
**வீரிய விர்த்தி மாத்திரை**
மிதமிஞ்சிய உஷ்ணத்தினாலும், அமிதபோகத்தினாலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப் படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.
24 மாத்திரைப்புட்டி ரூ. 7-00
**லேபனம் மெழுகு**
குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.
1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00
தேவைக்கு எழுதவும்:
கண்ணையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
Prop: S. M. R. M. S.
ராகலை பஜார், ஆள்க்கருணை.
(சிலோன்) (P. O.)


## உங்கள் காலபலன்

### இந்தவாரம் எப்படி?

"ரவி" சோதிடர்
3-6-62 முதல் 9-6-62 வரை

**மேடம்:** பொருள் விருத்தியுண்டு. கல்வி விஷயங்களிலும் அபிவிருத்தி காணப்படுகின்றது. ஆனால் தேகசுகம் மட்டும் இடையிடையே பாதிக்கப்படும். உறவினருடனும் சிறு விரோதங்களுண்டு.

**இடபம்:** எதிர்ப்புக்களைச் சமாளித்து முன்னேற முடியும் இளையசகோதரரால் பலவித உதவிகள்கிட்டும். தேகத்தில் உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படும். நேத்திரபீடையும் முண்டு.

**மிதுனம்:** தொழில் விஷயங்களில் தொடர்ந்து முன்னேற்றங்காணப்படும். தொழில் ஸ்தானத்திலும்வீட்டிலுள்ளகருமங்களைச் செய்வதில் பலரின் உதவியை எதிர்பார்க்கலாம். பூமியாலும்லாபமுண்டு. ஆனால் உறவினருடன்மட்டும் சிறு விரோதங்கள் காணப்படும்.

**கடகம்:** இந்த வாரத்திலும் குடும்பச் சூழ்நிலை சிக்கலாகவேயிருக்கும். தேகசுகம் பாதிக்கப்படும். ஆனால் தொழில் விஷயத்தில் சிறு முன்னேற்றமுண்டு. பொருள் லாபமும் கிட்டும்.

**சிங்கம்:** எடுத்த கருமங்களில் வெற்றியுண்டு. பொருள் விருத்தியுங் காணப் படுகின்றது. நண்பர்களும் உறவினரும் உதவியாயிருப்பர். எதிர்ப்புக்களும் குறையும்.

**கன்னி:** குடும்பச் சூழ்நிலைகள் இன்னுஞ் சில நாட்களுக்கு அனுகூலமாகவே இருக்கும். தேகசுகம் பாதிக்கப்படும், தொழில் ஸ்தானத்திலும் அதிக அவதானமாகவே நடக்க நேரிடும்.

**துலாம்:** குடும்பத்தில் சச்சரவுகள் தொடர்ந்து காணப்படுகிறது. மனைவி மக்களுக்குச்சுகவீனம்ஏற்படும். ஆனால் தொழிலில் மட்டும் முன்னேற்றமுண்டு; ஞாயிறுபகலை அவதானமாகக் கழிக்கவும்.

**விருச்சிகம்:** ஞாயிறு பிற்பகல் திங்கள் செவ்வாய் வாரங்களை அவதானமாகக் கழிக்கவும். மிகுதி நாட்கள் தொழிலுக்குச் சாதகமானவை. எதிர்ப்புகளையும் வெற்றிகொள்ள முடியும். ஆனால்பிரயாசம் மட்டும் அதிகமாக இருக்கும்.

**தனுசு:** தேகசுகம் தொடர்ந்து பாதிக்கப்படும், கந்தோரிலும் சில சங்கடங்கள் உண்டாகும். புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிகாலைஎன்பவற்றை அவதானமாக கழிக்கவும். கடைசி இருநாட்களும் தொழிலில் நன்மைபயக்கும்,

**மகரம்:** இந்தவாரத்தில் மாதாவுக்குச் சிறு சுகவீனமேற்படும். குடும்பத்திலும் சிறு சச்சரவுகளும் ஏற்படும். ஆனால் தொழில் விஷயங்களில் தொடர்ந்து முன்னேற்றமுண்டு; வெள்ளி, சனி வாரங்களை மட்டுமே அவதானமாகக்கழிக்கவும்.

**கும்பம்:** அன்னியர் மூலமாகச் சில உதவிகள் கிட்டும். சகோதரராலும் தொடர்ந்து நன்மையுண்டு. சத்துருஜயமும் கீர்த்தியு மேற்படும்.

**மீனம்:** உங்கள் சொந்தவிஷயங்களிலும் தொழில்விஷயங்களிலும் முன்னேற்ற மேற்படும்; பொருள்லாபம் உண்டு. ஆனால் தேகசுகம் பாதிக்கப்படும்.


**சோதிடம்**
உங்கள் பெயர், பிறந்தஊர், வருஷம், மாதம், திகதி, நேரம் முதலியவற்றுடன் ரூ 5-00போஸ்டல் ஓடர்அனுப்பினால் உங்கள் ஒருவருடகாலபலன் மிகச் சரியாக எழுதிஅனுப்பப்படும். இந்த விளம்பரத் துண்டைவைத்துஅனுப்பும் 'புதினம்' வாசகர்கள் மட்டும் ரூ. 3-00 அனுப்பினால் போதுமானது.
'ரவி' சோதிடர்,
226, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.



உங்கள் துணிகள்
வெண்மையாகவும்
பிரகாசமாகவும் விளங்க
**யாழ் சோப்**
உபயோகியுங்கள்.
**யாழ் சோப்**
தரத்தில் சிறந்தது.
அதற்கு நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு
பல மடங்கு லாபம் கிடைக்கிறது.

# சுவையான செய்திகள்!

## தண்ணீரில் தழைக்கும் தக்காளி

நன்ருக மூடப்பட்ட நீர்த் தொட்டிகளில் தக்காளிச் செடிகளும் வெள்ளரிக் கொடியும் நன்கு தழைத்து வளர்கின்றன. இத்தொட்டிகளில் மண் சிறிதுமே கிடையாது.

ஜெனேன் ஜுர்பித்ஸ்கியின் ஆய்வுக் கூடத்தில் உள்ள பாதுகாப்புப்பண்ணைகளில் மேற்படி நீர்த்தொட்டிகள் அமைக்கப் பட்டிருக்கின்றன,

இத்தொட்டிகளுக்குக் குளாய்கள் மூலம் சத்துப் பொருட்கள் செலுத்தப்படுகின்றன. தண்ணீரிலே தொங்கும் வேர்கள் சுவாசிப்பதற்கு காற்ருழத்திகள்மூலம் போதியளவு காற்று அவ்வப்போது செலுத்தப்படுகிறது.

## மயிரைவிட 8 மடங்குமெல்லிய உருக்குத்தகடு!

0:007 மில்லி மீட்டர் பருமனுள்ள உருக்குத்தகடுகளை பிராகிலுள்ள இரும்பு உலோக ஆராய்ச்சிக் கழகம் உற்பத்தி செய்துள்ளது.

மனிதனின் தலைமயிரைக் காட்டிலும் இந்த உருக்குத் தகடுகள் எட்டு மடங்குகள் மெல்லியவை.

சிறிய ட்ரான்சிஸ்டர் ரேடியோக்கள், அளவைக் கருவிகள் முதலியன செய்வதற்கு இந்தத் தகடுகள் உபயோகிக் கப்படுகின்றன,

## ஜன்னல் கதவுகளும் பறந்தன!

4900 மைல் தூரத்தை 4 மணி 42 நிமிடத்தில் பி. 58 என்ற அணுகுண்டுப் பிரயோக ஜெட் விமானம் பறந்து கடந்தது. அதனுல் முன்னைய மூன்று சாதனைகளை இந்த விமானம் முறியடித்து ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளது.

லொஸ் ஏஞ்சலிலிருந்து நியூயோர்க்குக்குஇந்தவிமானம் பறந்து செல்லும்போது சுமார் நாற்பது மைல் சுற்று வட்டாரத்தில் — வழிநெடுக இடிமுழக்கம் போல் பேரொலி கேட்டதாம். இது சுமார் 5000 அடி. உயரத்தில் பறந்து சென்றபோதிலும், வேகத்தின் அலை உந்தலினுல் தென் கலிபோர்ணியாவிலுள்ள கட்டிடங்களின் ஜன்னல் கதவுகள் பிய்த்துக்கொண்டு பறந்தனவாம். வேறு இடங்களிலும் கட்டிடங்களில் பிளவு கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்க விமானங்களில் மிகவேகமாகச் செல்லக்கூடியது இந்த விமானமேயாகும்

## பச்சை நிறக் கூந்தல் அழகிகள்!

குளித்து விட்டு வெளியே வந்துபார்த்த போது கூந்தல் பச்சைப் பசேலென்று பச்சை நிறமாக இருந்தது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பொன்னிறக் கூந்தல் அழகிகளுக்கு ஒரே திகிலாகப் போய்விட்டது. கூட்டங் கூட்டமாகப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று முறையிட்டனர்.

பொலிஸார் உடனடியாக நடவடிக்கையில் இறங்கினர். நகர மக்களுக்கு விநியோகிக் கப்பட்ட தண்ணீரை ஆராய்ச்சி செய்து பார்த்தபோது 'குளோரின்' என்ற திராவகம் அளவுக்கு அதிகமாகக் கலக் கப்பட்டிருப்பது கண்டுபிடிக் கப்பட்டது. இதே போன்ற ஒரு சம்பவம் கனடாவிலும் நடைபெற்றது. நீருக்குள் உண்டாகும் தாவரங்களை அழிப்பதற்காக ஒரு நீச்சல் குளத்தில் 'கொப்பர் சல்பேட்' என்ற திராவகத்தைக் கலந்தார்கள், அதன் அளவு தப்பாகப் போய்விட்டதால் குளத்தில் குளித்தவர்களின் தலைமயிர் பச்சையாகப் போய்விட்டது. விஷயம் புரியாது திகைத்த அவர்களுக்குப் பின்னுல் தான் சங்கதி தெரியவந்தது.

## நடமாட்டத்தை அறிவிக்கும் கருவி.

வீதிகளிலே சம்பவிக்கும் விபத்துக்களில் யார் குற்றவாளி என்பதைக் கண்டு பிடிப்பதற்கும், பொலிஸாரினுல் தேடப்படும் பயங்கரக் குற்றவாளிகள் யாராவது வீதிகளில் நடமாடுகிருர்களா என்பதை அறிவதற்கும் பாரிஸ் நகரிலுள்ள பொலிஸார் புது விதக் கருவியை உபயோகித்து வருகிருர்கள்.

சினிமாட்ரோப் என்ற இந்தக் கருவி வீதிகளில் செல்லும் வாகனங்கள், மனிதர்கள் அனைத்தையும் படம் பிடித்து காட்டுவதோடு சரியான நேரத்தையும் குறித்து வைத்துக்கொள்ளுகிறது. பொலிஸாரால் தேடப்படும் ஒருவன் வீதியில் செல்லும் போது எந்த எந்த வீதியால் சென்றிருக்கிருன் என்பதை இக் கருவி திட்டவட்டமாகக் காட்டும். றெயில் நிலையங்களிலோ அல்லது வேறு மறைவான இடங்களிலோ அவன் ஒழிந்து கொள்ளும்வரை இந்தக் கருவி அவனுடைய நடமாட்டத்தைக் காட்டிக்கொண்டே இருக்கும்.

## கீழ்ப்படியாத பொலிஸார்

நாள் முழுவதும் 'யூனிபோமை'க் கழற்றக்கூடாது, என்ற சட்டத்தை இத்தாலியிலுள்ள ஒரு பொலிஸ் நிலையத்தில் அமுல் நடத்தினுர்கள். ஓய்வு நேரத்திலும் 'யூனிபோம்' அணிந்து கொண்டிருப்பதால் தமது ஓய்வைப் பூரணமாக அனுபவிக்க முடியாதிருக்கிறதென்று அந்தப் பொலிஸ் நிலையத்திலுள்ள 18 பொலீஸ் 'காரர்களும் ஆட்சேபந் தெரிவித்தனர்.

ஜெனேவாவிலுள்ள ஒரு பொது இடத்தில் இவர்கள் அனைவரும் அணிவகுத்து நின்று பத்திரிகைப் படப்பிடிப்பாளர் படம் பிடிக்க அனுமதித்தோடு நிருபர்களுக்கும் பேட்டியளித்தனர்.

இவர்கள் அணிவகுத்து நின்ற இடத்துக்கு இரண்டு பொலிஸ் உயர்தர அதிகாரிகள் சென்று உடனே கலைந்து போகுமாறு உத்தரவிட்டனர் ஒன்பது பொலிஸார் உடனே கட்டளைக்குக் கீழ்ப்படிந்தனர். ஆனுல் மற்ற ஒன்பதுபேரும் பிடிவாதமாக நின்ற இடத்திலேயே நின்றனர். அவர்களைக் கைது செய்து இராணுவச் சிறைக்கூடத்துக்கு இட்டுச்செல்லும் படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இவர்கள் பதினெட்டுப் பேரும் விசாரணைக்குப் பின் சுட்டுக் கொல்லப்படவிருக்கிருர்கள்.

## கைகள் அற்ற ஓவியக்காரன்!

கண்ணும் கையுமற்ற ஒருவன் சிறந்த ஓவியனுக இருக்கிறதென்ருல் நம்ப முடிகிறதா?

கலையின் பிறப்பிடமான கிரேக்க நாட்டைச் சேர்ந்த கிரிஸ்டோசோயோகிஸ் என்பவனே அந்த அதிசய ஓவியன்,

அவன் பன்னிரண்டு வயதுச் சிறுவனுய் இருக்கும்போது ஜெர்மனியர்களின் குண்டு வீச்சு ஏதென்ஸ் நகரிலிருந்த அவன் வீட்டைத் தாக்கியது. உள்ளே இருந்த கிரிஸ்டே சோயோகிஸ் தனது இரு கைகளையும் ஒரு கண்ணையும் இழந்தான்.

முளங்கை வரை கரத்தை இழந்த அவன் தனது தோள் பகுதிக் கையினுல் எழுதப் பயின்ருன். ஓவியக் கல்லூரியில் சேர்ந்து ஓவியம் வரையவும் கற்றுக்கொண்டான்'

சுவிட்சர்லாந்தில் சமீபத்தில் நடைபெற்ற கண்காட்சிக்கு அவனது ஓவியங்களும் அனுப்பிவைக்கப்பட்டன. ஓவியர்கள் அனைவரும் அவனது ஓவியங்களில் சிறப்பைப் பாராட்டினர். அந்தக் கண்காட்சி அவனுக்கு உலகப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது.

## முதற் பிரயாணம்!

ரியோடி ஜனிரோவிலிருந்து புறப்பட்ட விமானம் ஓர்ளி விமான நிலையத்தில் வந்து இறங்கியது. அதில் பிரயாணம் செய்து வந்த ஒரு பிரயாணி மிகவும் சோர்வடைந்திருந்ததால் அப் பிரயாணியைக் கைத்தாங்கலாகத் தங்குமறைக்கு அழைத்துச் சென்று உட்காரவைத்தார்கள்.

டாக்டர் வரவழைக்கப்பட்டார்நோயாளியை டாக்டர் நன்கு பரிசோதித்துப் பார்த்துவிட்டுக் கூறினுர்.

"விமானத்தில் முதன் முதல் பிரயாணம் செய்பவர்களுக்கு இப்படி ஏற்படுவது இயல்பு. பயப்படக்கூடியதாக ஒன்றுமில்லை, ஊசிபோட்டிருக்கிறேன். விரைவில் நோயாளி பழைய நிலைக்கு வந்துவிடுவார். மறுமுறை விமானத்தில் பிரயாணம் செய்யும் போது இவருக்கு இப்படி ஏற்படாது "என்று நிச்சயமாகச் சொல்கிறேன்"

நோயாளி இன்னும் சோர்வாகவே காணப்பட்டார். விமான நிலையத்தில் உள்ள அதிகாரிகள் நோயாளியின் பெயர் விலாசத்தைக் கேட்டார்கள்.

"என் பெயர் ஹன்ஸ் ரூடெல்" என்ருர் பிரயாணி. டாக்டரும் அதிகாரிகளும் வாயைப்பிளந்தபடி நின்றனர், ஏன்?

இந்த ஹான்ஸ் ரூடெல் தான் இரண்டாவது மகாயுத்தத்தின் போது யுத்த விமானத்தை ஓட்டிச் சென்று பல சாகசச் செயல்களைப் புரிந்ததால் விருதுகள் பெற்றவன்,

## உடைமூலம் சிகிச்சை!

உடலில் நோய் கண்டு விட்டதா? அதற்காக டாக்டரை நாடாதீர்கள், உடனே உங்கள் தையல் கடைக்காரரிடம் செல்லுங்கள்.

இந்த நோய்க்கு இந்த மருந்து, இந்த குளிகை என்றது போய், இந்தச்சட்டை, இந்த வேஷ்டி என்ற நிலை வெகு விரைவில் வரப்போகிறது என்று கூறுகிருர் டாக்டர் கிறிஸ்டியன் புரோஜர்?

பில டெல்பியாவில் சமீபத்தில் நடைபெற்ற சர்வதேச மகாநாட்டில் பிரான்ஸைச் சேர்ந்தவிஞ்ஞானியான டாக்டர் புரோஜர் மேற்படி தகவலை வெளியிட்டார்,

"பொலிவினில் குளோரைட்" (பி. வி. சி.) தும்பைச் சன்னமாக்கி அதனுல் உடைகள் தயாரித்து அணிவதன் மூலம் நரம்புத் தளர்ச்சி போன்ற பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என்று பிரான்ஸ். ஜேர்மனிஆகியவற்றைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கருதுகிருர்கள்.

படுக்கை விரிப்புகளாகவும் படுக்கைநேர உடையாகவும் இத்தகைய உடைகளை நோயாளிகளுக்கு அணிவித்துப் பரீட்சை நடாத்திய டாக்டர்கள் அதனுல் எதிர்பார்த்ததை விட அதிக பலன் கிட்டியுள்ளதாக அறிவித்திருக்கிருர்கள்.

## உங்கள் கவலை என்ன?

- கடன் தொல்லையா? கஷ்ட நிலையா?
- காதலில் வெற்றி பெற வேண்டுமா?
- இல்லற வாழ்வில் இன்பம் தேவையா?
- கணவன்-மனைவிக்கிடையே மனக்கசப்பா?
- வழக்குக் கஷ்டங்களா? பரீட்சையில் துன்பமா?
- தொழில் உயர்வா? பிணிகளினுல் துன்பமா?
- மங்கையருக்கு ஏற்படும் மாதவிடாய் நோயா?

**விஷயங்கள் பரமரகசியமாக வைக்கப்படும்**

கவர்மென்ட் றெஜிஸ்டர் மந்திராச்சாரியார்

**பி. எம். திசநாயகா**

(நான்கு கோவில்களின் தர்மகர்த்தா)

அருத எண்ணெய் அலுவலகம்,

கம்பளை.

பிரச்சனைக் கதை

உங்கள் கருத்து

'அமுதாவின் காதலன், தனது நண்பனின் சகோதரி சுமதி வாழ்க்கையில் தவறிவிட்டதைக்கண்டு, அவளுடைய வாழ்வைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுடைய காதலைத் தியாகம் செய்கிறுன்.''—வண்ணை சிவராசா எழுதிய இந்தக் கதையை சென்றவாரம் 'புதின'த்தில் வெளியிட்டு, அந்தக் 'காதலன்' செய்த தியாகத்தைப்பற்றி வாசகர்களின் கருத்தைக் கேட்டிருந்தோம். நாலைந்து தினங்களுக்குள்ளாகவே 62 நேயர்கள் தங்கள் கருத்துக்களை எழுதி அனுப்பியிருந்தார்கள், அவற்றில் சிறந்ததென்று கருதிய மூன்றை மட்டும் கீழே தருகிறோம்.

# அமுதம் நஞ்சாகிவிட்டது!

அத்தான்!

அப்படி அழைக்க எனக்கு இனி உரிமையில்லை என்ற பின்னும் பழக்கதோஷம் விடமாட்டேன் என்கிறது. செத்துப்போனவர்கள்தான் தெய்வத் தன்மை எய்துகிறுர்கள் என்று எண்ணியிருந்தேன், காதலைத் துறப்பேன் என்றும், அப்படிச் செய்தால் அமரபதவியென்றும் நீங்கள் நினைக்கிறீர்கள்.

விபசார சிகரத்தை மனைவியாக்கிக் கொண்ட நீங்கள் என்னைப்பார்த்துக் கற்பின் மாணிக்கம் என்கிறீர்கள். என்னிடம் அழகு, பண்பு—எல்லாவற்றிற்கும் மேலாகப் பணம் இருக்கிறது, ஈ மாதிரி மொய்ப்பார்கள் இளிச்ச வாயர்கள், அதில் யாருக்கோ அதிர்ஷ்டம், பாக்கியம் என்றெல்லாம் உங்கள் கற்பனை ஓடுகிறது.

பெண்ணையும் பெண்மனத்தையும் காதலையும் கொஞ்சமேனும் உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாலு வருடம் தவம் கிடந்து, உத்தியோகமாக வேண்டுமேயென்று நோன்பிருந்து நான் கண்ட பலன்......?

சுமதி!

தாய் தந்தையரற்று, தமயனேடு வாழ்ந்து தறுதலையானவள். தவறிவிட்டாள். தாரமாக்க யார் வருவார்? தர்மப் பிரபு—முன்வந்து விட்டீர்கள், தாலி கட்ட!

இதற்குத் தியாகம் என்று புனிதத் தன்மை வேறு சூட்ட முனைகிறீர்கள்! இத்தனை நல்ல மனது, இரக்க சுபாவம், சமூக சேவா எண்ணம் இருந்தால் இளமையிலிருந்தே என்னேடு நாடகமாடியிருக்க வேண்டாமே!

இல்லை!!

சுமதி என்னிடம் ஒருநாள் சொன்னளே!

'ஆண்களென்றாலே இளிச்சவாயர் கூட்டம்' என்று. அதுதான் உண்மையாகி விட்டது. தவறிய பெண்ணை ஏற்றுக்கொள்ள எவன் முன் வருவான்?

தவறு செய்யத் தூண்டியவன் மனச்சாட்சி கொன்றிருக்கும். அல்லது அண்ணன் ஆனந்தன் உதைத்து உணரச் செய்திருப்பான்.

மாட்டிக் கொண்ட பிறகு வேதாந்தம் பேசுகிறீர்கள். அவள் வாழ்வில் ஒளியேற்றி விட்டதாக உங்களையே ஏமாற்றிக் கொள்கிறீர்கள். வாழ்வு தொய்ந்து மனது கசந்த ஒரு வேளையில், எரிமலையாய் கக்கி சாம்பலாய், இருண்ட புகையாய் உங்கள் வாழ்வு அஸ்தமிக்கப் போகிறது.

தெரியாதவன் கையில் ஒப்படைத்து, பொய்யை அத்திவாரமாக்கி, கண்காணு ஊரில் குடித்தனம் வைத்து......... ஆனந்தன் அந்த முறையைக் கையாண்டிருக்கலாம்.

அது போகிறது. என்வாழ்வு இருண்டு, கறுத்து, கோரமாய், விகாரமாய்........ ... உங்களிடம் கெஞ்சவில்லை.

பெற்றவர்களுக்கு அடங்கிய பிள்ளை, முதுகெலும்பில்லாதவன், ஒழுக்கங் கெட்டவன், நண்பனின் தங்கையோடு சரசமாடுபவன், மனச்சாட்சி இரக்கசிந்தை என்று வாய்சாலகம் பண்ணுவோன்—இந்த வரிசையில் எவனுக்கும் சாதல் செய்ய உரிமையில்லை.

உங்களை மன்னிப்பதா?...... பாழ் நரகம்தான் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமெனச் சபிக்கிறேன். தெய்வம் உண்டு என்றால் இது பலித்தே திரும்.

உங்களுக்குப் பிடித்ததென்பதனால் நீலச்சேலைகளை அலமாரி நிறைய அடுக்கி வைத்திருந்தேன். அத்தனையும் இன்று தீக்கிரையாகின்றன!

என்மன ஆசைகளும் எதிர்காலமும் கூடத்தான்.

அமுதாவா இப்படியெல்லாம் நினைக்கிருள் ஆம்! ஆனல் அமுதம் நஞ்சாகி விட்டது.

—'யாழ்ப்பாணம் தேவன்'

# இதுவும் ஒரு தியாகமா?

காதலன் செய்தது தியாகமா?

ஒரு பெண்ணின் வாழ்வை வளம்படுத்துகிறேன் என்று சொல்லிக் கொண்டு தன்னை உயிருக்குயிராகக் காதலித்த அமுதாவின் வாழ்வைப் பாலைவனமாக்கி விட்டு 'அவன்' செய்தது தியாகமா?

அமுதா—

தன் காதலை தெய்வீகக் காதலென்று எண்ணிப் பேணிப் போற்றிவந்தவள். அதற்கு எடுத்துக் காட்டு—

அன்று விமான நிலையத்திலே

அவளது காதலன், ''நாலுவருடங்கள் எனக்காகப் பொறுத்திருப்பாயா?'' என்று கேட்டபொழுது—

''நாலு வருடங்களென்ன, நாலு யுகங்கள் கூட உங்களுக்காகக் காத்திருப்பேன்!'' என்றுமன உறுதியுடன் அவள் கூறினள்,

அவளது அந்தப் பதில் எப்படியாவது—எவ்வளவு காலம் சென்றாலும் 'அவனை' அடைந்தே தீருவேன் என்ற எண்ணத்தைப் பிரதி பலிக்கிறது.

அதே சமயத்தில்—

சுமதியை எண்ணும் பொழுதும் மிக மிகப் பரிதாபமாக இருக்கிறது. அவளுக்கு வாழ்வு கொடுக்க யார் முன்வரப் போகிறுர்கள்?—இதுஉண்மை;

ஆனல்—

ஒரு பெண் (அமுதா) 'அவனை' நம்பியிருக்கும் பொழுது—அவளது அனுமதியின்றி எப்படிச் சுமதியைக் கல்யாணம் செய்து கொள்ளலாம்? இதற்குப் பெயர் தியாகமா?

அமுதாவிடம் பணம்உண்டு என்பதனல் அவளது வாழ்க்கை சீர்பட்டு விடுமா? அமுதாவின் அனுமதியைப் பெற்று 'அவன்' சுமதியை மணந்திருக்கலாம்—இது தியாகம்!

சுமதியின் வாழ்வு இருண்டுவிடப் போகிறதே என்று எண்ணிய 'அவன்', ஏன் தான் சுமதியைக் கல்யாணம் செய்துகொண்டு விட்டால்—அமுதா உயிருடன் இருப்பாளா என்று சிந்திக்கவில்லை?

உயிருக்குயிராகத்தான்காதலித்த ஒருவன் வேறு ஒருபெண்ணை மணந்து விட்டான் என்ற செய்தியை அறிந்தபிறகு இந்தப் 'பொலிடோல்' காலத்தில் உயிரை மாய்க்க எண்ணி விட்டால்?

ஒருபெண்ணின் வாழ்வைப் பலியெடுத்து—இன்னுமொரு பெண்ணின் வாழ்வை வளம் படுத்துவது தியாகமா?

எப்படித் தியாகமாகும்?

— பாமா ராஜகோபால்

# 'எரிமலையின் குமுறல்'

''அன்பே என் அமுதா'' என எழுதிய தாங்கள் இன்று அமுதா என அழைப்பதற்குக் காரணம் ...... விதியின் விளையாட்டா? அல்லது நாம் செய்த வினைப்பயனு? என எழுதியிருந்தீர்கள். செய்ததுரோகத்தை மறந்து தியாகி வேடம் போடுவதற்கு விதியையும்- வினைப்பயனையும் சாட்சியாக வருந்தி அழைக்கின்றீர்கள்.

குழந்தைப் பருவ முதல் நேற்று வரை நம்மிடையே ஏற்பட்டிருந்த பிணைப்பை அறிந்திருந்தும் நீங்கள் விதியையும், வினைப்பயனையும் துணைக்கழைப்பதைப் பார்க்க - வேதனையிலும் சிரிக்கத்தான் தோன்றுகின்றது. செய்வது தவறு என மனப்பூர்வமாகத் தெரிந்து கொண்டும் தவறு செய்பவனை சமூகம் மன்னிக்காது. ஆனல் நான் - ?

நீங்கள் சந்தர்ப்ப சூழ்நிலையால் தவறிழைத்திருந்தால்-சுமதியின் அவலவாழ்விற்கு நீங்களேமூலகாரணமென்றால் -அதற்குப் பிராயச்சித்தமாகச் சுமதியை மணம் புரிந்திருக்கலாம். நானும்உங்களைத்தம்பதிகளாக்கியிருப்பேன் என் காதலைத் துறந்து.-ஆனல் நீங்களோ, யாரோ தவறு செய்துவிட்டதற்காக நீங்கள் எனக்கு தவறுஇழைத்துவிட்டீர்கள் -சிறு பிராயம் முதல் - நேற்று வரை தங்களுடன் பழகி மனக் கோட்டைகள் பல கட்டியிருந்த - உங்கள் அமுதாவை - மறக்கத் துணிந்தீர்கள் -அதன்பயனக இன்று நான் இலவு காத்த கிளியானேன்.

என் உள்ளம் எரிமலையாக குமுறிக்கொண்டிருக்கின்றது. எழுத்தில்வரையமுடியாது. எழுதினலும் பயனில்லை. நீங்கள்என்னைப்பொறுத்த அளவில் கறந்தபால்.

என்னை வேறு ஒருவரை மணம் முடிக்குமாறு ஆலோசனையைகூறியிருந்தீர்கள். உங்கள் ஆலோசனையை என்னல் ஏற்றுக்கொள்ள முடியாது. என் இதயம் ஒருவருக்குத் தான் சொந்தம். அந்த அவர் இன்று இன்னுமொரு சகோதரியின் உரிமையாளர்-வெற்றிடமாக இருக்கும் என் உள்ளம் என்றுமே வெற்றிடமாகத்தான் இருக்கும். ஆம்-கன்னியாகவே காலங்கழிக்க உறுதிகொண்டுள்ளேன்.

காதலில் தோல்வியுற்றதும் - பொலிடோலையும் - பாழ் கிணற்றையும் அரவணைத்து(கா)தற்கொலைசெய்து கொள்ளும் அளவிற்கு நான் கோழையல்ல. தங்கள்மாஜிக் காதலி-என்றுமே—வெறும் அமுதாவாகவே வாழ்வாள். — அபலை அமுதா.

— யாழ்வாணன்

# விபசாரியா, கொலைகாரியா?

[எட்டாம் பக்கத் தொடர்ச்சி]

தவிக்கவேண்டும், இதற்கு முடிவுகாணமுடியாதா? விவாகரத்து முயற்சியும் தோல்வியில் முடிந்துவிட்டது, எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் களவு வாழ்க்கை? இதிலிருந்து விடுபட மார்க்கம்?

இராப்பகல் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து விட்டாள் எடித். பேர்ஸி தோம்சனை ஒழித்துக்கட்ட வேண்டும். அதுவும் ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் சிறிது சிறிதாக அவனைக் கொல்லவேண்டும்,

''அவசரப்பட்டுக் காரியத்தில் இறங்கினல் நாங்கள் அகப்பட்டுக் கொள்ள வேண்டி ஏற்படும், மிதமிஞ்சிய தூக்கமாத்திரைகளாலும் அவரைக் கொல்லலாம், இந்திய முறையில் தயாரிக்கப்பட்ட நச்சுத்திராவகத்தைச் சிறிதுசிறிதாக உணவோடுகலந்தாலும் காலகதியில் அவர் நோயாளியாகி விடுவார், அவருக்கு இருதய நோயிருப்பதால் எங்கள் மீது சந்தேகம் விழாமல் நாங்கள் சமாளித்துக் கொள்ளலாம், இது போன்ற வழக்குகளைத் தினமும் நான் பத்திரிகைகளில் படிக்கிறேன்...'' இப்படித்தனது திட்டத்தைப் பிரெட்ரிக்குக்கு விளக்கி எழுதுகிருள் எடித். அவனுடைய ஒத்துழைப்பும் கிடைத்துவிட்டது,

படுக்கையில் கிடந்த பேர்ஸிதோம்சன் விடியற் புறம் இரண்டு மணியளவில் எழுந்து 'குடிக்கத் தண்ணீர் வேண்டும்' என்கிருன். தன் திட்டத்தைத் தொடங்க இதுதான் சமயம் என்று எழுந்து செல்கிருள் எடித்.

(தொடரும்)

Registered as a newspaper at the G. P. O.

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வெள்ளி வெளியீடு

அடுத்த இதழில்
கே. எஸ். சிவகுமாரன்
எ ழு து ம்
"குறிஞ்சிக் காதல்"
(சிறுகதை)
○
அரசியல்வாதி
இராசதுரையும்
எழுத்தாளர்
பொன்னுத்துரையும்
(மட்டக்களப்பில்
சுவையான
ஒரு சந்திப்பு)

எகிப்தின் எழிலரசி! பேரழகி! கிளியோபாத்ரா!
தமிழ் நாட்டுச் சிறந்த முத்துக்களை
தான் அருந்தும் ஒருவகைபானத்தோடு சேர்த்துக்குடித்தாளாம்,
தன்மேனியை மினுமினுப்பாக்க!
அதுபோன்ற முத்துக்களா! வைரங்களா!
வைடூரியங்களா!
என்ன வேண்டும் உங்கட்கு?
யாழ்ப்பாணம் 137, கஸ்தூரியார் வீதி
பி. வி. எஸ். நாதன் அண் பிறதர்
நகை மாளிகைக்கு வாருங்கள்.
எ—ர்: தமிழ்ச்செல்வன் (உ. இராமசாமி)

இதோ ஒரு புதுவரி:

# விற்பனை வரி!

## சட்ட திட்டங்கள் தயார்!

## சாராயத்துக்கு வரி இல்லை!

புதுப் புது வரிகளைக் கண்டு பிடிப்பதில் சிறந்த ஆராய்ச்சிகள் செய்து வரும் நிதிமந்திரி, இப்பொழுது அகிலஇலங்கையிலுமுள்ள எல்லாமக்களிடமும் பாரபட்சமின்றிக் கறந்தெடுக்கக் கூடிய ஒரு புதிய வரியை நமக்குத் தரத் தயாராகி விட்டார்!

அதுதான் விற்பனை வரி!

விற்பனை வரி என்றதும் ஏதோ வியாபாரிகளுக்கு மட்டுத்தான் என்று நினைத்துவிடப்போகிறீர்கள். அதுதவறு, ஒரு ரூபாவுக்கு 2 சதம் விற்பனைவரி செலுத்த வேண்டுமென்று சட்டம் வருமானல், பொதுமக்கள் பத்து ரூபாய்க்குப் பொருள் வாங்கும்போது விற்பனைவரியாக இருபது சதத்தையும் சேர்த்து வியாபாரி வசூலித்துக் கொள்வார்! அப்படி வசூலித்த பணத்தையே அரசாங்கத்துக்கு வரியாகச் செலுத்துவார். ஆகவே, வியாபரிகளிடமிருந்து அரசாங்கம் விற்பனை வரியைப் பெற்றுக் கொண்ட போதிலும் அது பொது மக்களிடமிருந்துதான் வசூலிக்கப் படுகிறது!

முக்கியமான உணவுப்பொருள்களுக்கும் எண்ணெய் வகைகளுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுமாம். இந்த முக்கியமான பொருள்களில் அரசாங்கம் சாராயத்தையும் சேர்ந்திருக்கிறது! சாராயம் குடிப்பவர்கள் -பாவம், அவர்கள் விற்பனை வரி செலுத்த வேண்டியதில்லை!

உடனடியாக இந்தவரிஅமுலுக்கு வரமாட்டாது என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனாலும் இதற்கான சட்ட திட்டங்கள் யாவும் தயாராகி விட்டன. அமைச்சர் விரும்பும் எந்தச் சமயத்திலும் இது நடைமுறைக்கு வரலாம்!

## பக்திக் கவிஞர் 'பரமஹம்சதாசன்' கண்ணீர் மல்கக் கூறிய கதை!

கவிஞர் பரமஹம்ச தாசன் தாயகம் திரும்புவதை முன்னிட்டு மட்டுநகர், நாவலப்பிட்டி, ஆகிய இடங்களில் அவருக்குப் பிரியாவிடை அளிக்கப் பட்டது. மட்டக்களப்புக் கூட்டத்தில் கண்ணீர் மல்க கவிஞர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

''நான் ஒரு ஏழை, பக்தனுகவே வாழவேண்டுமென்ற எனது ஆசை, பக்தியின் மேலீட்டால்கவிஞனுக்கிவிட்டது. கவிஞனுவேன் என்று நான் என்றுமே கனவு காணவில்லை கவிஞன் என்று என்னை அழைக்கக் கூடவெட்கப்பட்டேன்.

எனது கவிதைக்கு உள்ளுணர்வு தந்தவர் சுத்தானந்த பாரதியார். வெளியுணர்வு தந்த பெருமை திரு. எஸ். டி. சிவநாயகத்தைச் சாரும். நான் தமிழ்நாட்டில்பிறந்தாலும் ஈழநாட்டின் விபுலானந்தப் பேரறிஞன் பிறந்த மட்டக்களப்பு மண்தான் என்னை வளர்த்துச் சிறந்த கவிஞனுக்கியது!

மலச்சிக்கலுக்கும் மூலவியாதிக்கும்
ரிஷி லேகியம்
(ரிஷி கருணைக்கிழங்கு லேகியம்)
தேகமெலிவு, கண், கை, கால், திரேக எரிச்சல், பற்றுக்கள், நெஞ்சுவலி, இடுப்புவலி. வயிற்றுப்பொருமல், புளியேப்பம், பித்தவாய்வு, பசியின்மை, அசீரணம், சோம்பல். கைகால் அசதி, பௌத்திரம், உள்மூலம், வெளிமூலம், கீழ்மூலம், இரத்தமூலம், மூல முளைகள். மூலச் சூட்டினல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.


சகல விபரங்களுமடங்கிய கேட்லாக் இனம்.
15 நாள் டின் ரூ. 3/-. 30 நாள் டின் ரூ. 5-50
தபால் செலவு சதம் 85
ஞானசுந்தா வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு - கொழும்பு

கவர்ச்சிகரமான
புளொக்குகள்
செய்வதற்கு சிறந்த இடம்
Sri Lanka Block Makers
131, Messenger, Street, COLOMBO.

உத்தரவாதமுள்ள
யாழ் மார்க்
அலுமினியப்
பாத்திரங்களையே
உபயோகியுங்கள்.
நிக்கல், குரோமியம், வெள்ளி, தங்கம்,
எலக்ரோப் பிளேட்டிங் வேலைகளும்
குறைந்த செலவில் செய்து கொடுக்கப்படும்.
யாழ் உலோகத் தொழிற்சாலை
(YARL METAL INDUSTRIES)
250, கே. கே. எஸ். ரோட், : யாழ்ப்பாணம்.
போன்: 260

மங்கையர் அணியும்
தங்க
நகைகள்

★ அழகாகவும் ★ நாகரிகமாகவும்
★ நம்பிக்கையாகவும் வாங்குவதற்கும்
ஓடர்கள் கொடுப்பதற்கும்
பொ. அம்பலவாணர்,
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: சவரின் ஜுவலரி ஸ்ரோர்ஸ்,
114, செட்டியார் தெரு, கொழும்பு.

இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னுலை தி. ச. வரதராசன்.
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348 தந்தி; அச்சகம்,